# அனல்

01.03.2026

புதுமலர்: 23

இதழ்: 02

பங்குனி - சித்திரை

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -



# தேவன் ஏற்றுக்கொள்ளும் பாவ அறிக்கை

**2026** March - April

சீயோன் தேவாலயப் பிரசுரம்

Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. படித்ததில் சில..
06. குறுக்கெழுத்துப்போட்டி - 130
07. வாலிபர் வளாகம்
08. வினா விடை - 132
09. பெண்கள் பக்கம்
10. அருட்பணியாளர் சரிதை
11. அனலின் ஆன்மீக விருந்து
12. பக்தர்கள் பயிலகம்
13. காலையில் ஜெபிப்போம்...
14. தேவன் தந்த வைரங்கள்




## ஜெப வேண்டுதல்



வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:


சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.




T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

தேவனை நேசிக்கும் அனலின் வாசக உள்ளங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

புதுவருடத்தில் இரண்டு மாதங்கள் கடந்து சென்றுவிட்டது ஆனாலும் காலங்களைத் தம்முடைய கரத்தில் வைத்திருக்கும் கர்த்தர் நம்மோடு கூட இருக்கிறார்.

தம்மை விசுவாசிப்பவர்கள் எவரானாலும் தம்முடைய பிள்ளையாக ஏற்றுக் கொள்ளும் தேவன் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒவ்வொரு மனிதனுக்கும் இந்தச் சலாக்கியத்தைக் கொடுத்துள்ளார்.

இக்கடைசி நாட்களில் தேவ பிள்ளைகளாக மாறுவதை உறுதிப்படுத்துங்கள். உண்மையுள்ளவர்களாக, நீதியுள்ளவர்களாக வாழ உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். தேவன் உங்களை அற்புதமாக நடத்துவார்.

**சங்கீதம் 77: 13 தேவனே, உமது வழி பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது; நம்முடைய தேவனைப் போலப் பெரிய தேவன் யார்?**

**- ஆசிரியர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# கவலைகளை விட்டொழியுங்கள்

❑ வை. விமலதாஸ்

ஒரு பாம்பு வளைந்து நெளிந்து தரையில் ஊர்ந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த ஒரு குட்டிக் குரங்குக்கு வேடிக்கையாக இருந்தது. மெதுவாகப் போய் அந்தப் பாம்பைக் கையில் பிடித்து விட்டது.

பாம்பும் குரங்கின் கையை இறுக்கமாகச் சுற்றிக் கொண்டது. விஷப் பல்லைக் காட்டி சீறியது. குரங்குக்குக் கொஞ்சம் பயம் வந்து விட்டது. கொஞ்ச நேரத்திலேயே அதன் கூட்டமெல்லாம் கூடி வந்து விட்டன. ஆனாலும் யாருமே குட்டிக் குரங்குக்கு உதவ முன்வரவில்லை.

“ஐயய்யோ... இது பயங்கரமான விஷமுள்ள பாம்பு. இது கொத்தினால் உடனே மரணந்தான். குரங்கு பிடியை விட்டதுமே பாம்பு இவனைக் கொத்திவிடும். இவன் தப்பிக்கவே முடியாது” என்று குட்டிக் குரங்கின் காதுபடவே பேசிவிட்டு ஒவ்வொன்றாகக் கலைந்து சென்று விட்டன.

தன்னுடைய கூட்டமே தன்னைக் கைவிட்டுவிட்ட சூழ்நிலையின் வேதனை, எந்த நேரமும் கொத்திக் குதறத் தயாராக இருக்கும் நச்சுப் பாம்பு, மரண பயம் எல்லாம் சேர்ந்து குரங்கை வாட்டி வதைத்தன.

“ஐயோ... புத்தி கெட்டுப் போய் நானே வலிய வந்து இந்த மரண வலைக்குள் மாட்டி விட்டேனே”. குரங்கு பெரிதாய்க் குரலெழுப்பி ஓலமிட்டது. நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. உணவும், நீரும் இல்லாமல் உடல் சோர்ந்து போய்விட்டது. கிட்டத்தட்ட மயங்கி சரியும் நிலைக்கு வந்து விட்டது. கண் இருளத் தொடங்கியது.

அந்த நேரத்தில் பெரியவர் ஒருவர் அந்த வழியே வந்தார். குரங்கு இருந்த நிலைமையைப் பார்த்ததும் நடந்ததை உணர்ந்து கொண்டார். குரங்கை நெருங்கி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சொந்தங்களெல்லாம் கைவிட்டுவிட்ட நிலையில், தன்னை நோக்கி மனிதர் ஒருவர் வருவதைக் கண்ட குட்டிக் குரங்கிற்கு கொஞ்சம் நம்பிக்கை வந்தது. அவர் நெருங்கி வந்து சொன்னார், "எவ்வளவு நேரந்தான் பாம்பைக் கையிலேயே பிடித்துக்கொண்டு கஷ்டப்படப்போற? அதைக் கீழே போடு" என்றார்.

குரங்கோ, "ஐயய்யோ, பாம்பை நான் விட்டுவிட்டால் அது என்னக் கொன்றுவிடும்" என்றது. அவர் மீண்டும் சொன்னார், "பாம்பு செத்து அதிக நேரமாகிவிட்டது. அதைக் கீழே வீசு".

அவர் வார்த்தையைக் கேட்ட குரங்கு பயத்துடனே பிடியைத் தளர்த்திப் பாம்பைக் கீழே போட்டது. அட... நிஜமாகவே பாம்பு ஏற்கனவே குரங்குப் பிடியில் செத்துத்தான் போயிருந்தது. அப்பாடா...

குரங்குக்கு உயிர் வந்தது. குரங்கு அவரை நன்றியுடன் பார்த்தது. "இனிமேல் இந்த முட்டாள் தனம் பண்ணாதே" என்றபடி ஞானி கடந்து போனார்.

ஆம் நண்பர்களே நம்மில் எத்தனையோ பேர் மனக்கவலை என்ற செத்த பாம்பைக் கையில் பிடித்துக் கொண்டு விட முடியாமல் கதறிக் கொண்டிருக்கிறோம்.

கவலைகளை விட்டொழியுங்கள்.

மகிழ்ச்சியாய் இருங்கள்...

ஒவ்வொரு கெட்ட குணங்களும் ஒவ்வொரு நோயை உருவாக்கும்,

பெருமையும் கர்வமும் இதய நோய்களை உருவாக்கும்,

கவலையும் துயரமும் வயிற்று நோய்களை உருவாக்கும்,

துக்கமும் அழுகையும் சுவாச நோய்களை உருவாக்கும்,

பயமும் சந்தேகமும் சிறுநீரக நோய்களை உருவாக்கும்,

எரிச்சலும் கோபமும் கல்லீரல் நோய்களை உருவாக்கும்..

அமைதியை விரும்புவதே அனைத்தையும் குணமாக்கும்.

ஆரோக்கியமான உடலிலிருந்தே ஆரோக்கியமான சிந்தனைகள் பிறக்கும். உடலின், மனதின் தேவைகளுக்கு மதிப்பளியுங்கள். பசிக்கும் போது உணவருந்துங்கள். பசியை நீங்கள் புறக்கணித்தால் பசி உங்களைப் புறக்கணிக்கும். எப்போதும் உடலின் அழைப்பை புறக்கணிக்காதீர்கள்.

**1பேது-5:7 அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




❒ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு அனலின் மூலமாக இனிய வாழ்த்துக்கள்.

நேற்றும் இன்றும் என்றும் மாறாத நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்து உங்களை அற்புதமாக வழிநடத்தி மாறாதவராக, உண்மையுள்ளவராக வாக்குத்தத்தங்களை நிறைவேற்றி அதிசயமாக உங்களை நடத்தி வருகிறார். அவருக்கே மகிமையுண்டாகட்டும்.

**சங்கீதம் 56:3 நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்.**

சாதாரணமாக எல்லா மனிதரிடத்திலும் **'பயம்'** என்ற தன்மை அல்லது 'சுபாவம்' உண்டு. வேதாகமம் சொல்கிறது: பராக்கிரமசாலி கூட திடீரென்று ஒரு தாக்குதல் அல்லது ஒரு செயல் நடக்கின்ற போது பயப்படுகிறான் என்பதாக. பயம் இல்லாத மனிதர்கள் யாருமேயில்லை.

சில மனிதர்களுக்கு இரவைக் குறித்து பயம். அவர்கள் தனியாக இரவிலே செல்லமாட்டார்கள். அதிலும் மயானங்களை கடக்க பயம். சிலர் தங்களுக்கு ஒரு பயமும் இல்லை என்று சொல்லுவார்கள். ஆனால் இரவு நேரங்களில் சத்தமாக பாடல்களைப் பாடிக் கொண்டு அல்லது தங்களுக்குள்ளே பேசிக்கொண்டு செல்வார்கள்.

இன்னும் சிலருக்கு நாய் என்றால் பயம். சிலருக்கு சில மிருக ஜீவன்களைக் கண்டால், ஊரும் பிராணிகள், பூச்சிகளைக் கண்டால் பயம்.

சில மக்களுக்கு தனியே நித்திரை செய்யப்பயம். இப்படி மனிதர்கள் சாதாரணமாக பயந்து போய் சோர்ந்து போகின்ற சந்தர்ப்பங்கள் அனேகமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இன்னும் சிலருக்கு தங்கள் எதிர்காலத்தைக் குறித்த பயம். நான் இல்லாத காலத்தில் பிள்ளைகள் என்ன செய்யப்போகிறார்களோ? இவர்களை யார் தான் பார்ப்பார்களோ? விசாரிப் பார்களோ? ஒற்றுமையாக இருப்பார் களோ? என்ற பயம்.

சிலருக்கு வியாதியைக் குறித்து பயம். அதிலும் சில வியாதியின் பெய ரைக் கேட்கும் போதே மரணத்தை தங்களுக்குள் அனுபவிக்க ஆரம்பித்து விடுகின்றார்கள். அதனாலேயே அழுகை, புலம்பல், துக்கம் கொண்டாட ஆரம் பிப்பார்கள்.

பிரியமானவர்களே, தேவனுடைய வல்லமைக்கு முன்பதாக சாதாரண காய்ச்சலும், தலையிடியும் ஒன்று தான். கான்சர், இருதய பிரச்சினைகளும் ஒன்று தான். எல்லாமே அவருடைய ஒரே வார்த்தையினாலே தான் குண மாகின்றது. ஆமென்.

சிலர் கடன் பிரச்சினையினாலே பயந்து போய் ஒடுங்கிக் கொண்டிருப் பார்கள். என்ன செய்வது? எப்படி முடிப்பது? யார் உதவி செய்வார்கள்? என்று கடன் நிமித்தம் பயந்து போயிருப் பார்கள். ஒரு தொலைபேசி அழைப்பு வந்தாலோ, அல்லது யாரும் தேடி வீட்டிற்கு வந்தாலோ பயம். ஏனென்றால் அது கடன் கொடுத்தவர்களாயிருப்பார் கள் என்ற சிந்தை தான்.

நாம் வாசித்த வசனத்தைக் கவனித்துப் பாருங்கள். தாவீது சொல்கிறார்: 'நான் **பயப்படும் நாளில்** கர்த்தரை நம்புவேன்' என்பதாக. அப்படியானால் தாவீதுக்கும் பயம் இருக்கத்தான் செய்தது.

பாருங்கள், தாவீது ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு சிங்கத்தையும், கரடியையும் ஆட்டை தாக்க வந்த காரணத்திற்காக சாதாரண மாக அவைகளை அடித்துக் கொல் கின்றார்.

**1சாமுவேல் 17:34-36 (34.) தாவீது சவுலைப் பார்த்து: உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒரு சிங்கமும், ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. 35. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்த போது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன். 36. அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன்; விருத்தசேதனமில் லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல இருப்பான்; அவன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தானே என்றான்.**

கூடவே 10அடி உயரமான இராட்சதன் கோலியாத்தை பட்டயம், ஈட்டி, கேடயம் போன்ற யுத்த ஆயுதங் கள் எதுவுமில்லாமல் சாதாரண குருவி யடிக்கும் கவண் கல்லால் விழுத்து கின்றான்.

எப்படிப்பட்ட பெலன், எப்படிப் பட்ட தைரியசாலி, எதற்கும் பின்னடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யாத மிருகமாகிய சிங்கத்தையே கொல்லும் பெரிய தைரியசாலி. ஆனாலும் சொல்கிறார்: **'நான் பயப்படும் நாளில்'** என்பதாக. ஆம் தாவீதிற்கும் பயம் இருந்தது. ஏனென்றால் சவுல் தாவீதை கொலை செய்ய இஸ்ரவேலின் எல்லா இடங்களிலும் தாவீதைத் தேடி திரிகின்றான். இதனாலே தாவீது ஒளித்துக் கொள்ளாத இடமே இல்லை. கன்மலைகள், குகைகள், அரணிப்பான இடங்கள், காட்டுப்பகுதிகள், வனாந்தரங்கள் என சவுலுக்குப் பயந்து தன் உயிரை, தன் மனைவி பிள்ளைகளுடைய உயிரை தப்புவிப்பதற்காக ஒளித்துத் திரிகின்ற நிலமை.

தன்னையும் தன் குடும்பத்தையும் கூடவே தன்னோடுள்ளவர்களையும் யாரும் காட்டிக்கொடுத்துவிடுவார்களோ என்ற பயம். தன்னை தாவீது என்று அடையாளம் கண்டு கொள்வார்களோ என்ற பயம்.

**1சாமுவேல் 21:12-13 (12.) இந்த வார்தைகளைத் தாவீது தன் மனதிலே வைத்துக்கொண்டு, காத்தின் ராஜாவாகிய ஆகீசுக்கு மிகவும் பயப்பட்டு, 13. அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தன் முகநாடியை வேறுபடுத்தி, அவர்களிடத்தில் பித்தங் கொண்டவன்போலக் காண்பித்து, வாசற்கதவுகளிலே கீறிக் கொண்டிருந்து, தன் வாயிலிருந்து நுரையைத் தன் தாடியில் விழப்பண்ணிக் கொண்டிருந்தான்.**

இப்படி பலவிதமான பயப்படுத்துகின்ற சூழ்நிலைகள் வந்தாலும் அதனால் பயந்து போனாலும் யாரை நம்புகிறேன் என்று சொல்கிறார் தெரியுமா?

**'நான் பயப்படும் நாளில் <u>கர்த்தரை நம்புவேன்'.</u>**

**ஆம் பிரியமானவர்களே, நீங்களும் உங்களுடைய பய சூழ் நிலைகளுக்கு அப்பால் கர்த்தரை நம்புங்கள்.**

**சங்கீதம் 56:4**இல் சொல்கிறார்: **தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?**

பிரியமானவர்களே, பயம் உங்களை நெருக்கும் போது அதற்கு மாறாக தேவனுடைய வார்த்தையைப் பேசுங்கள். அவருடைய அதிசயங்களை, அற்புதங்களை, வேதத்திலுள்ள அவருடைய வல்லமைகளை புகழ்ந்து பேசுங்கள். உங்களை சுற்றியுள்ள பயத்தின் சூழ்நிலைகளை உங்களால் சாதாரணமாக மேற்கொள்ள முடியும்.

**சங்கீதம் 56:11 தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான்?**

ஆம் தாவீதிற்கு தெரியும், நான் தேவனை நம்பினால் பயப்படவே தேவையில்லை என்பதாக. ஏனென்றால் தேவனைத் தாண்டி மனுஷனால் ஒன்றும் செய்ய முடியாது. நாம் தேவன் மேல் வைக்கும் நம்பிக்கை குறையும் போது பயம் தானாக ஆரம்பிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிலருக்கு சில மனுஷரைக் கண்டால் பயம். அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய வீடுகளுக்கு வந்தாலே பயப்படுவார்கள். அவர்கள் சாப்பிட, குடிக்க தருவதை சாப்பிடவோ குடிக் கவோ மாட்டார்கள். ஏனென்றால் தங்களுக்கு ஏதும் செய்துவிடுவார்கள் என்ற பயம்.

செய்வினை, மந்திரங்கள், சூனியங்கள் இப்படிப்பட்டவைகளைக் குறித்த பயம்.

பிரியமானவர்களே, நீங்கள் கர்த்தரோடிருந்தால் கர்த்தர் உங்க ளோடிருப்பார். மனுஷன் மாம்சமான வன். அவனால் உங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது.

தேவன் எமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பெலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.

நம்முடைய இயற்கையான சுபாவம் பயமுள்ளது தான். ஆனால் தேவனுடைய ஆவியானவர் எமக் குள்ளே வாசம்பண்ண வரும் போது நாம் பெலனடைந்து விடுவோம்.

**மரண இருளின் பள்ளத் தாக்கில் நடந்தாலும் பொல்லாப் புக்கு பயப்படமாட்டோம். காரணம் கர்த்தர் எம்மோடு இருப்பதே.**

எனவே கிறிஸ்துவுக்குள் பிரிய மான சகோதரனே, சகோதரியே உங்களுடைய பயத்தின் மத்தியில் நீங்கள் செய்ய வேண்டியது:

**தேவனுடைய வார்த்தை யைப் பேசுங்கள்**

**தேவனை மட்டுமே நம்பி யிருங்கள்**

இந்த பூமியிலுள்ள எவராலும் உங்களை மேற்கொள்ளவே முடியாது. ஏனென்றால் சேனைகளின் கர்த்தர் உங்களோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலம்.

தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்திப்பாராக.

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

"விருந்துக்கு வந்தவர்கள் செத்து விழுந்தார்கள்;
செத்துப்போனவன் விருந்துக்கு வந்தான்.
யார்? யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2026 தை – மாசி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

ரூத் – நகோமி (ரூத் 1:14-17, 2:17-18, 3:5,6,10)

*சரியான விடை எழுதிய அனைவருக்கும் பாராட்டுக்கள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# உன்னால் முடியும்

❒ ஜசிந்தா அக்கா




மேரி ஒன்பது வயது சிறுமி. மெல்ல மெல்ல அவள் சரீரம் பாதிக்கப்பட்டது. பெற்றோர் அவளை மருத்துவரிடம் கொண்டு சென்றனர். அவர் அவளைப் பரிசோதித்தார். பின் 'உங்கள் மகளுக்கு இருதயம் பெருத்த தினால் பாதிக்கப்பட்டிருக்கிறாள், படுத்தே இருக்க வேண்டும்' என்றார். பெற்றோர் மிகவும் அதிர்ச்சி அடைந்து கலங்கினர். ஆனால் மனதைத் திடப்படுத்திக் கொண்டனர்.

மேரி மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டாள். ஊசி மருந்துகளும், மருத்துவப் பரிசோதனைகளும் அவளை வாட்டி வதைத்தது. பாடசாலையில் படிக்க முடியாத சூழ்நிலை சூழ்ந்து கொண்டது. உயிர் பிழைப்பாளோ என்று சிலர் நினைத்தனர். இந்த வேதனையின் மத்தியில் அவளது தாயின் அன்பு அவளை அதிகமாய் அணைத்துக் கொண்டது.

**'பயப்படாதே, ஆண்டவர் கைவிடமாட்டார், உன்னால் எழும்பி நடக்க முடியும், உன்னால் படிக்க முடியும்'** என்ற தாயின் தேற்றுதலும், அன்பும், மனோதிடனும் மேரியை ஆறுதல்படுத்தி உற்சாகமடையச் செய்தது.

இவ்வண்ணமாய் மருத்துவமனை வாழ்க்கை ஒரு வருடம். பின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டாள். பெலவீனம் இருந்தாலும் பாடசாலை சென்று படிக்க ஆரம்பித்தாள். நாட்கள் செல்லச் செல்ல சரீரம் பெலனடைய அங்கு நடக்கும் நிகழ்வுகளில் பங்குபற்றத் தொடங்கினாள். தலைமை தாங்கியும் நடத்தினாள். ஆசிரியரும், மாணவர்களும் விரும்பத்தக்க ஒரு மாணவியாகக் காணப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒரு நாள் 'இயேசு விடுதலைகள் கொடுக்கிறார்' என்று அறிந்து தன் சகோதரர்களுடன் அந்த விடுதலைக் கூட்டத்திற்கு சென்றிருந்தாள். அங்கு பாடிய பாடல்கள், கொடுக்கப்பட்ட தேவசெய்தி அவளுக்குள் கிரியை செய்ய தனது சரீரத்தில் சுகத்தையும், புதுபெலனையும் உணர்ந்தாள். கூட்டத்தின் முடிவிலே தாமதம் இன்றி முன் சென்று இயேசு எனக்கு பரிபூரண விடுதலையைக் கொடுத்துவிட்டார் என்று மகிழ்ச்சியோடு சாட்சி கூறி வீடு திரும்பினாள்.

பாடசாலை வாழ்க்கையை முடித்த அவள் சில காலம் சிறு பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கும் ஆசிரியரானாள். பின் இயேசுவின் அழைப்பை ஏற்று அவளை ஞாயிறு பாடசாலையில் கற்றுக் கொடுக்கவும் ஆசிரியர்களை உருவாக்கவும் தேவன் பயன்படுத்தி வருகிறார்.

பிள்ளைகளே, உங்களுக்கும் என்ன தான் குறைவு வந்தாலும், வியாதி தாக்கினாலும் இயேசப்பாவின் துணையோடு மன உறுதியினாலும், கடின முயற்சியினாலும் முன்னேற **உங்களால் முடியும்.** சோர்ந்து போகவேண்டாம்.


**பிலிப்பியர் 4:13 என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.**

## படித்ததில் சில...

சமாதானம் மற்றும் தேவனின் நற்செய்தியே, அனைத்து மனுக் குலத்திற்கும், பரலோகத்தின் அன்பான அறிவிப்பாகும். இயேசுவின் பிறப்பை தேவதூதர்கள் அறிவித்த போது, அவர்கள், 'பூமியில் சமாதானம், மனிதர்கள் மத்தியில் பிரியமும் உண்டாவதாக' என்று அறிவித்தனர். தேவனின் இருதயம் எப்போதும் இரட்சிப்பை நோக்கியே சார்ந்துள்ளது. தள்ளிவிடுதலையல்ல (நிராகரிப்பையல்ல) என்பதை நமக்கு நினைவூட்டு கிறது. கிறிஸ்து – கிருபை, மன்னிப்பு மற்றும் அன்பைப் பொழிந்து, உடைந்த உறவுகளை மீண்டும் கட்டியெழுப்பவும் வந்தார். ஒரு மிகச் சிறந்த உதாரணம்; கெட்டகுமாரனின் கதையாகும். மகன் காணாமல் போய், சீரழிந்து, அவமானத்தை சந்தித்தாலும், தந்தை இரக்கத்துடன் அவனை நோக்கி ஓடி, அவனது புத்திர சுவிகாரத்தையும் அவர்களின் உறவையும் மீண்டும் புதுப்பித்தார்.

அன்பானவர்களே, இன்று கிறிஸ்து நம்மை இதுபோன்று தான் சந்திக்கிறார். அவர் நம்முடைய தோல்விகளில் நம்மை அரவணைக்கிறார். நம்முடைய உள்ளான காயங்களை குணப்படுத்துகிறார், மற்றவர்களை மன்னிக்க கற்றுக் கொடுக்கிறார். நாம் அவருடைய சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளும் போது, நாம் நற்செய்தியின் கருவிகளாகி, குடும்பங்கள், நட்புகள் மற்றும் சமூகங்களுக்குள் குணப்படுத்தலைக் (விடுதலையைக்) கொண்டு சென்று, பூமியில் பரலோக அன்பைப் பிரதிபலிக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# குறுக்கெழுத்துப் போட்டி 130

## இடமிருந்து வலமாக

02. கர்த்தருடைய ஆலயத்தில் பண்டகசாலைகளை ஆயத்தப்படுத்தச் சொன்னவன்
05. மரத்திலே தூக்கிப்போடப்பட்ட அகாஸ்வேருவின் பிரதானிகளில் ஒருவன்
08. ...................... கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான்
09. 'ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும்' என்று தீர்க்கதரிசனம் உரைத்தவர்
10. 'நீ மலைகளின் நிழலைக் கண்டு, மனுஷர் என்று நினைக்கிறாய்' எனச் சொன்னவன்
14. தன் யோசனை நிறைவேறாததால் நான்றுகொண்டு செத்தவன்

## வலமிருந்து இடமாக

02. மிஸ்பாவுக்கும் சேணுக்கும் நடுவே நிறுத்தின கல்லுக்கு சாமுவேல் இவ்வாறு பெயரிட்டான்
03. 'கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேளும்' என சவுலிடம் கூறியவன்
07. இவன் சேத்தின் குமாரன்
12. 'எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன்' எனக் கூறியவன்
13. ஆவியானவரால் பூமிக்கும் வானத்துக்கும் நடுவே கொண்டு போகப்பட்ட தீர்க்கதரிசி

## மேலிருந்து கீழாக

01. இவன் பீறுகிற ஓநாய்
04. 'நீ மிகவும் பிரியமானவன்' என்று கர்த்தருடைய தூதனால சாட்சி பெற்றவன்
06. இவன் செய்த காரியம் தன் வீட்டாரை அதம்பண்ணி அழிக்கும்படி அவர்களுக்கு பாவமானது

## கீழிருந்து மேலாக

07. 'சூரியன் உதிக்கையில் இருண்டு போகும்' என்றவர்
11. இவள் போவாசைக் களவாயெடுத்தாள்
14. தன் குமாரன் இறந்து போனதைக் கண்ட போது யூதா குடும்பத்திலுள்ள ராஜவம்சமான யாவரையும் சங்காரம் பண்ணியவள்
15. 'என் ஆத்துமாவே, அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே' என்று கூறியவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




❑ போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமுள்ள தேவ பிள்ளைகளே, உங்கள் அனைவருக்கும் நல்ல இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள். எப்படியிருக்கின்றீர்கள்? நீங்கள் சகல மனநிறைவுடனும் வாழ ஆண்டவர் உங்களுக்கு உதவி புரிவாராக. பல பிரச்சினைகள் உங்களை நெருக்கி நின்றாலும் ஆண்டவரின் தயவு உங்களுக்கு போதுமானதாக இருக்கும். தைரியமாக இருங்கள். இந்த சூழ்நிலையை நீங்கள் கடந்து செல்ல ஆண்டவர் நிச்சயம் உங்களுக்கு உதவி செய்வார்.

அருமை சகோதர - சகோதரியே, இன்றும் உங்கள் வாழ்க்கையில் வியாதி பெலவீனத்தால் கட்டப்பட்டு, துன்பப்பட்டு வாழ்கின்றீர்களா? ஒவ்வொரு நாளும் ஏதோவொரு பெலவீனம் உங்களை ஒடுக்கிக் கொண்டிருக்கிறதா? வியாதியின் அகோரத்தினை தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறீர்களா?

பாவம் எனும் கயிறு உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்தினை தடுத்து உங்களை இறுக்கக் கண்டிக் கொண்டுள்ளதா? இந்த பாவத்தைவிட்டு வெளியே வர விரும்புகின்றேன். ஆனாலும் என்னால் முடியவில்லையே என அங்கலாய்க்கின்றீர்களா? பாவத்தினால் வந்த விளைவுகள் பெரும் சுமையாக உங்களை அமிழ்த்துகின்றதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அந்தகார சக்திகளான பிசாசின் வல்லமைகள் உங்களை எதிர்த்து நிற்கின்றதா? 'மலைக்கு முன்னுள்ள மடுவைப்போல' பிசாசின் சக்திகளிட்கு முன் நிற்கும் நீங்கள் உங்களைக் குறித்து உணருகின்றீர்களா? வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக பிசாசின் வல்லமைகள் உங்களுக்கு எதிராக செயற்படுகின்றதா?

சூழ்நிலைகள் உங்களுக்கு பெரும் சுமையாக இருக்கின்றதா? எப்பக்கத் திலும் நெருக்கங்களும், ஏமாற்றங்களும், தோல்விகளும் உங்களை ஒடுக்கிக் கொண்டிருக்கிறதா? மாட்டின் கழுத்திலுள்ள நுகத்தைப் போல் இவை அனைத்தும் உங்களின் மேல் பாரமாக உள்ளதா? இதோ உங்களுக்காக ஓர் வேதாகம வசனத்தை இங்கே பதிவிட விரும்புகின்றேன்.

**ஏசாயா 10:27 அந்நாளில் உன் தோளினின்று அவன் சுமையும், உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும்; அபிஷேகத்தின் நுகம் முறிந்துபோம்.**

தேவ பிள்ளையே உன்மேல் எப்படிப்பட்ட பாரமான நுகம் சுமத்தப் பட்டிருந்தாலும், கர்த்தருடைய ஆவியானவர் கொடுக்கும் அபிஷேக வல்லமையால் அது முறிந்து போகும் என வேத வார்த்தை சொல்கின்றது. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் கர்த்தருடைய வார்த்தை ஓர் போதும் ஒழிந்து போகாது. அருமையானவர்களே! தேவ வார்த்தையை விசுவாசியுங்கள். இன்றே உங்கள் வார்த்தையை சரிப்படுத்திக் கொண்டு ஜெபத்தில் தரித்திருந்து 'தேவனே உமது பரிசுத்த ஆவியை எனக்குத் தாரும்' என மன உருக்கத்தோடு ஜெபம் பண்ணுங்கள். பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்றுக் கொள்ள தாமதிக்க வேண்டாம்.

அந்த தெய்வீக அபிஷேகம் உங்களை நிரப்புகின்ற நேரத்தில் தானே உங்களால் தாங்க முடியாத இந்த அத்தனை நுகங்களும் முறிந்து விழும். தேவ வல்லமையைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆமென். பெற்றுக் கொள்ளுங்கள், தேவ அபிஷேகத்தை. அபிஷேகம் பெறும் அந் நாளிலே நீங்கள் முற்றிலும் விடுவிக்கப்பட்டு வேறு மனிதராக மாறிவிடுவீர்கள். அந்த மகிமையின் சந்தோஷ நாள் உங்களுக்கு தூரமாக அல்ல; சமீபமாகவே உள்ளது.

இப்பொழுது வாலிபர் வளாகத்திற்குரிய வேதபாட செய்திக்குள் நுழைவோம் வாருங்கள். நம்முடைய வாழ்க்கையில் நாம் எடுக்கக்கூடிய பிழையான தீர்மானங்களைக் குறித்து நாம் பார்த்து வருகின்றோம். அந்த வகையில் ஆதாம் - ஏவாள் எடுத்த பிழையான தீர்மானங்களைப் பார்த்தோம். ரெகொபெயாமின் தவறான முடிவைக் குறித்து விளக்கமாக ஆராய்ந்தோம். இப்பொழுது யூதாஸ் தன் வாழ்வில் முக்கிய தருணத்தில் எடுத்துக் கொண்ட மிகத் தவறான முடிவுகளைத் தியானித்து வருகின்றோம். அந்த வகையில் இந்தியாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அப்போஸ்தலன் என அழைக்கப்படும் சாது சுந்தர் சிங் வாழ்வைக் குறித்து கடந்த இதழ்களில் தியானித்தோம். இப்பொழுது அவரது வாழ்வின் அடுத்த அத்தியாயம் குறித்து தியானிப்போம் வாருங்கள்.

சாது சுந்தர் சிங் அனுபவித்த ஆவிக்குரிய அனுபவங்களில் அவர் கிறிஸ்துவுக்காக பட்ட பாடுகள் மற்றும் அவரது நற்செய்தி அறைகூவலானது விரைவாகவே தேவ ஆவியின் கிருபையால் வெளி உலகத்தின் கவனத்திற்கு வந்தது. உலகத்தின் பல பாகங்களிலும் வாழ்ந்த கிறிஸ்தவ மக்களின் சிந்தனைகள் இந்த இந்து தேசத்தின் அப்போஸ்தலன் மேல் பதிய ஆரம்பித்தன. ஆம் வாலிபப் பிள்ளைகளே, நீங்களும் கிறிஸ்துவோடு வாழ்ந்து அவரது ஆவிக்குரிய உன்னத அனுபவங்களை அனுபவிக்க தொடங்கும் போது நீங்கள் மலையின் மேலுள்ள பட்டணத்தைப் போல் மாறுவீர்கள். கர்த்தர் உங்களை மறைந்திருக்கவிடமாட்டார். நிச்சயமாக உங்களை இந்த உலகத்திற்கு வெளிச்சமாக மாற்றி ஆசீர்வதிப்பார்.

வெளித்தேசங்களில் உள்ள கிறிஸ்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் பிரசங்கிக்க வேண்டும் என்ற அழைப்பு எல்லா இடங்களிலும் இருந்து அவருக்கு வந்து கொண்டே இருந்தது. அவர் எங்கு சென்றாரோ சென்ற இடங்களிலெல்லாம் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு சிலுவை நாதரைப் பின்பற்ற வேண்டும் என்பதனையே அறைகூவலாகவும், மிஷனரி அழைப்பாகவும் கூறிக்கொண்டு வந்தார். இவரது அழைப்பானது அநேகரை ஜெபிப்பதற்கும், கிறிஸ்துவுக்காக செயற்படுவதற்காகவும் தூண்டியது.

சாது சுந்தர் சிங் நமது தேசமாகிய இலங்கை, பர்மா, மலேசியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குப் பிரயாணம் சென்று பிரசங்கித்திருந்தார். அத்தோடு இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று தனது ஊழிங்களை செய்துள்ளார்.

அவர் எங்கெங்கே சென்றாரோ அங்கெல்லாம் அவரைக் கண்ட மக்கள் அவரில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சாயலைக் கண்டார்கள்.

உதாரணமாக: ஒரு தடவை ஓர் கூட்டத்தில் அவர் பேசிக் கொண்டிருந்ததை ஓர் சிறுமி கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தாள். அப்பொழுது அவள் தன் பெற்றோரிடம், இவர் இயேசு கிறிஸ்துவா? என கேட்டாளாம். ஆத்துமாக்களைக் குறித்த பாரத்திலும், தூய்மையாக தன்னைக் காத்துக் கொள்வதிலும் சுந்தர் சிங் நிச்சயமாக இயேசு கிறிஸ்துவை பிரதிபலித்துக் காண்பித்து வாழ்ந்தார் என்பது உண்மையாகும்.

ஆம் பிரியமுள்ள வாலிபப் பிள்கைளே நம்மை தூய்மையாக காத்துக் கொள்வது என்பது ஒவ்வொரு தேவ பிள்ளைகளின் தலையாய கடமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நமது வாழ்க்கையை வீண் அசுத்த ரோகங்களிற்கு ஒப்புக்கொடுக்காமல் நம்மைக் கட்டுப்படுத்தி, பரிசுத்தமாக வாழும் போது தேவன் தமது மகிமையினால் எங்களை பிரகாசிப்பிப்பார்.

வேதாகமத்தில் இதற்கான பல உதாணரங்களைப் பார்க்கின்றோம். ரூத் எனும் அழகிய இளம் விதவைப் பெண் திருமணமாகாத நடுத்தர வயது கொண்ட போவாஸ் என்பவரை சந்திக்கும் காட்சியினை வேதாகமம் அழகாக நமக்கு விபரிக்கின்றது. இதனை சற்று தியானிப்போம் வாருங்கள்.

**ரூத் 3:7 போவாஸ் புசித்துக் குடித்து, மகிழ்ச்சியாயிருந்து, ஒரு அம்பாரத்து அடியிலே வந்து படுத்துக்கொண்டான்; அப்பொழுது அவள்: மெள்ளப்போய், அவன் கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கிப் படுத்துக்கொண்டாள்.**

போவாஸ் அறுவடை நாளிலே தனது அறுவடையை குறித்து மிகவும் சந்தோஷப்பட்டு அந்த மகிழ்ச்சியினை வேலையாட்களுடனும் பகிர்ந்து கொண்ட பிற்பாடு ஒரு குவியல் அருகே இரவு படுத்துக் கொண்டார். அவரோ திருமணம் ஆகாத நடுத்தர வயது கொண்ட ஆண். அவர் படுக்கையின் காலடியில் அழகான பெண் படுத்துக் கொண்டிருந்தாள்.

இங்கு இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிட விரும்புகின்றேன். 'ரூத் போய் காலடியில் படுத்தக் கொண்டதானது போவாசைப் பாலியல் பாவத்திற்குள் விழுத்தும்படியான செய்கை' என பலர் நினைப்பதுண்டு. ஆனால் உண்மையில் நகோமி ரூத்தினை அந்த நோக்கத்தோடு போவாஸிடம் அனுப்பவில்லை. 'காலடியில் படுத்துக் கொள்வதானது வேலைக்காரி எனும் பொருளுடையது' போவாஸின் நற்குணங்களை அறிந்த நகோமி ரூத் ஓர் வேலைக்காரி போல் தன்னை தாழ்த்தி நடக்கும்படி அறிவுறுத்தி அனுப்பினாள்.

**ரூத் 3:8 பாதிராத்திரியிலே, அந்த மனுஷன் அருண்டு, திரும்பி, ஒரு ஸ்திரீ தன் பாதத்தண்டையிலே படுத்திருக்கிறதைக் கண்டு,**

'பாதி ராத்திரியிலே அருண்டு' என்பதானது அவன் அவளைக் கண்டு திடுக்குற்றதை அல்லது அதிர்ச்சியுற்றதை குறிப்பிடும் சொல்லாக அமைகின்றது.

**ரூத் 3:9 நீ யார் என்று கேட்டான்; அவள், நான் உம்முடைய அடியாளாகிய ரூத்; நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்தரவாளி என்றாள்.**

போவாஸ் ரூத்தினை விசாரிக்கின்றான். அப்பொழுது ரூத் 'எனக்கு நீர் என்ன செய்ய விரும்புகின்றீரோ அதனை செய்வதற்கு நான் என்னை ஒப்புக்கொடுக்கிறேன்' எனும் தொனியில் பதில் கொடுக்கிறாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாலிப சகோதர சகோதரிகளே, இக் காட்சியினை சற்று சிந்தித்துப் பாருங்கள். நேரம் இரவு நேரம்; யாரும் அருகில் இல்லாத சூழ்நிலை. அதே நேரம் அறுவடையின் காரியத்தின் நிமித்தம் போவாஸ் மிக மகிழ்ச்சியோடு இருக்கின்றார். அழகான பெண் வேறு. எவ்வளவோ விபரீதங்கள் நடந்தேற வாய்ப்பான தருணமாக அந்த வேளை இருந்தது.

சமீபத்தில் சிறு பிராயத்துக்கும் வாலிப பிரயாத்துக்கும் இடையில் இருக்கின்ற ஒரு சகோதரன் ஒரு காவல்துறை அதிகாரியின் வீட்டில் குறிப்பிட்ட சில வேலைகளைச் செய்வதற்கு சென்றிருந்தார். அச் சமயத்தில் குறிப்பிட்ட நேரத்தில் திடீர் என அவ் அதிகாரியின் மனைவியை தவறான எண்ணத்தோடு அணைத்து விட்டார். அவர் உடனடியாக கண்டிக்கப்பட்டு, விசாரிக்கப்பட்ட போது அவ் அதிகாரி யின் மனைவியின் தோற்றம் தன்னை அவ்வாறு செய்யத் தூண்டியதாக பதில் கொடுத்தார்.

ஆனால் போவாஸ் தன் வாழ்க்கையை தூய்மையாக காத்துக் கொள்வதில் மிக அவதானமாக செயற்பட்டார். இந்த சூழ்நிலையிலும் போவாஸ் உணர்ச்சி வசப்படாமல் மிகவும் நிதானமாக செயற்பட்டதனைக் காண்கிறோம். எந்த சூழ்நிலையிலும் தேவ பிள்ளைகளே நிதானத்தை இழக்காதிருங்கள். அத்தோடு போவாஸ் தன் வாழ்வைக் குறித்து மிகத் தெளிவுடன் இருந்தார். கடமை உணர்ச்சி யுடன் செயற்பட்டார். தனது வாழ்வு எந்த சூழ்நிலையிலும் கறைபட்டுவிடக்கூடாது என்பதில் மிக கவனமாக செயற்பட்டார்.

ஆம் பிள்ளைகளே! நாம் வாழ்கின்ற இக் காலமானது சரீர தூய்மையை பெரிது படுத்தாத காலமாக உள்ளது. இச் சூழ்நிலையில் தேவனை அறிந்த தேவ பிள்ளைகளாகிய நீங்கள் ஒவ்வொருவரும் தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும் என தேவன் விரும்புகிறார்.

எதற்கும் அவசரப்படாமல் உணர்ச்சிகளுக்கு முதலிடம் கொடுக்காமல் உங்களுடைய நற்பெயர் கெட்டுப்போக விடாமல் தேவனுக்காக வாழ வேண்டும் என உங்களை அழைக்கின்றேன். நிச்சயம் தேவன் உங்களுக்கு நல்லதோர் எதிர்காலத்தினை வைத்திருக்கிறார்.

சாது சுந்தர் சிங் எவ்வண்ணமாக தன் சரீரத்தினைப் பரிசுத்தமாக காத்து நடந்தாரோ அவ்வண்ணமே நீங்களும் வாழ ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

மறு இதழில் சந்திக்கும்வரை தேவ கிருபை உங்களோடிருப்பதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வினா விடை - 132

01. பேதுருவின் பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டது யார்?

02. ரெம்பான் என்னும் நட்சத்திர சொரூபத்தை சுமந்தது யார்?

03. 'அவன் வருகையில் நான் திடுக்கிட்டு, முகங்குப்புற விழுந்தேன்' விழுந்தது யார்?

04. வர்த்தகரை வானத்து நட்சத்திரங்களிலும் அதிகமாக்கினது யார்?

05. 'என்னிலும் அவள் நீதியுள்ளவள்' என தன் மாமனிடம் நற்சாட்சி பெற்ற மருமகள் யார்?

06. இராஜாக்களண்டையில் அடக்கம் செய்யப்பட்ட ஆசாரியன் யார்?

07. 'எனக்கு சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்' என வாசிப்பதெங்கே?

08. கிழக்கு வெளுக்கும் நேரமுதல் நட்சத்திரங்கள் காணுமட்டும் ஈட்டிகளைப் பிடித்திருந்தவர்கள் யார்?

09. செத்தவனைப் போல இயேசுவின் பாதத்தில் விழுந்தது யார்?

10. அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் எப்படி இருப்பார்கள்?

## குறுக்கெழுத்துப் போட்டி - 129, வினா விடை - 131

### சரியான விடை எழுதியவர்கள்

**காரைநகர்**

01. லோ.வதனி
02. த.ஆகாஸ்
03. த.எப்சிபா
04. சிவாஜினி
05. வி.அனுராதா

**சங்கானை**

06. ம.இன்னிஷா
07. ம.டயானி

**திருநெல்வேலி**

08. ந.செல்வன்

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குறுக்கெழுத்துப் போட்டி - 129

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. சாலொமோன் (11நாளாகமம் 6:1)
04. ஒபதியா (1இராஜாக்கள் 18:12)
05. மோசே (உபாகமம் 28:11)
09. பார்வோன் (நெகேமியா 9:10)
10. மெல்கிசேதேக்கு (எபிரெயர் 7:2)
12. மனமேட்டிமை (நீதிமொழிகள் 16:18)
14. ஈராம் (1இராஜாக்கள் 9:11-12)

**வலமிருந்து இடமாக**

03. யோசபாத் (11நாளாகமம் 19:5)
07. ஆரோன் (எண்ணாகமம் 17:3)
08. எரேமியா (எரேமியா 1:1)
11. இருதயம் (சங்கீதம் 112:7)
13. ஒத்னியேல் (நியாயாதிபதிகள் 1:13)

**மேலிருந்து கீழாக**

01. சாலொமோன் (1இராஜாக்கள் 1:37)
02. சவுல் (1சாமுவேல் 11:13)
03. யோனத்தான் (1சாமுவேல் 14:27)

**கீழிருந்து மேலாக**

06. பர்சபா (அப்போஸ்தலர் 1:23)
08. எரேமியா (புலம்பல் 3:26)
09. பாலாக் (எண்ணாகமம் 22:41)
13. ஒப்ரா (நியாயாதிகள் 6:11)
14. ஈத்தாய் (11சாமுவேல் 15:21)

---

# வினாவிடை 131

## சரியான பதில்கள்

01. மன்னா (யாத்திராகமம் 16:13-26)
02. சிவந்த சமுத்திரம், யோர்தான் நதி (யாத்திராகமம் 4:16, யோசுவா 3:16-17)
03. லாபான், பெத்துவேல் (ஆதியாகமம் 24:50)
04. யெப்தா, தாவீது (நியாயாதிபதிகள் 11:3, 1சாமுவேல் 22:2)
05. நாகோமி (ரூத் 1:20-21)
06. மோசே (உபாகமம் 27:16)
07. பேதுரு (அப்போஸ்தலர் 11:17)
08. சேபாவின் இராஜஸ்திரீ (1இராஜாக்கள் 10:4-7)
09. தாவீது (1நாளாகமம் 17:23)
10. சாலொமோன் (நீதிமொழிகள் 23:23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




❒ திருமதி. J.பிலிப்




இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய கிருபையினால் 2025ஆம் ஆண்டை கடந்து 2026ஆம் ஆண்டில் காலெடுத்து வைத்து இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன. இவ் வருட வாக்குத்தத்தத்தின்படி நாம் அவர் மேல் நம்பிக்கையாயிருப்போம். அப்போது நம்முடைய காரியங்களை எல்லாம் அவர் வாய்க்கப்பண்ணுவார்.

**நாகூம் 1:7 தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்.** தேவனால் நாம் அறியப்பட வேண்டுமானால் நாம் முழுமனதுடன் அவரை நம்ப வேண்டும். எங்களுடைய நம்பிக்கை இன்று யார் மேல் இருக்கிறது? எங்களிடம் இருக்கும் பணத்தின் மேலா அல்லது சொத்து, நகை அல்லது பணக்கார உறவினர் மேல் எம் நம்பிக்கை இருக்கிறதா? நம்முடைய தேவன் நம்பிக்கையை கவனிக்கிற தேவனாக இருந்து அதற்கு ஏற்ற பலனை எமக்கு அளிப்பார்.

பத்து கன்னிகைகளின் ஒரே நோக்கம் மணவாளனை சந்திக்க வேண்டும். (மத்தேயு 25:1) பத்து கன்னிகைகளும் ஆயத்தமாகிறார்கள். ஆனால் வேதம் கூறுகின்றது: அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்கள், மற்ற ஐந்து பேர் புத்தியில்லாதவர்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக் கொண்டு போனார்கள், எண்ணெயைக் கொண்டு போகவில்லை; ஆனால் புத்தியுள்ளவர்களோ மணவாளனை சந்திப்பதற்காக தங்கள் தீவட்டிகளோடு பாத்திரத்தில் எண்ணெயையும் கொண்டு சென்றார்கள். **மத்தேயு 25:5 மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


'புறப்படுங்கள்' என்ற ஒரு சத்தம் கேட்டவுடன் பத்து கன்னிகைகளும் தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். நடந்தது என்ன? புத்தியில்லாதவர்களுடைய தீவட்டி அணைந்து போகத்தொடங்கியது. புத்தியுள்ளவர்களிடம் எண்ணெயைக் கேட்டார்கள். ஆனால் அவர்களோ, இது எங்களுக்கும் உங்களுக்கும் போதாது. உங்களுக்காக நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். அப்படியே அவர்கள் வாங்கப்போனபோது 'மணவாளன் வந்துவிட்டார்' ஆயத்தமாயிருந்த புத்தியுள்ளவர்கள் அவரோடு கூட கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது.

புத்தியில்லாத கன்னிகைகள் வந்து ஆண்டவரே, எங்களுக்கு திறக்க வேண்டும் என்று கூப்பிட்டார்கள். ஆனால் வந்த மறு உத்தரவு; **மத்தேயு 5:12 அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

இதை வாசிக்கும் சகோதரியே, சற்று நீ சிந்தித்துப்பார். நாம் மணவாளனாகிய இயேசுவை சந்திக்க ஆயத்தமாகின்றோம் என்பது எமது பேச்சு. ஆனால் எமது செயற்பாடு எப்படிப்பட்டதாக இருக்கிறது. 'தேவன் தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்' தேவனை நம்புகிறவர்கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருப்பார்கள்.

நாம் ஆயத்தமாயிருக்கிறோமா? அல்லது புத்தியில்லாத கன்னிகைகள் போல் இருக்கின்றோமா? ஆயத்தம் இல்லாவிட்டால் மணவாளனை சந்திக்க முடியாது, கதவு அடைக்கப்படும். தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும், ஆவியானவருக்கும் நாம் முதலிடம் கொடுத்தால் புத்தியுள்ள ஸ்திரீகளைப் போல அவருடைய சத்தம் கேட்டு வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவோம்.


**நீதிமொழிகள் 4:13 புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டு விடாதே; அதைக்காத்துக்கொள், அதுவே உனக்கு ஜீவன்.**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






# அமந்தா ஸ்மித்
## 1837 - 1915

### வரலாற்றில் செயற்படும் தேவன்

அடிமைத்தனம், பல நூற்றாண்டுகளாக, பல்வேறு சூழ்நிலைகளில், மக்கள் சிக்குண்டு அடிமைகளாக சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்றனர். பேச முடியாதவர்களாக, சுயமாக எதையும் செய்ய முடியாதவர்களாக, தங்கள் கைகள் கட்டப்பட்டு, அடிமைகளாக நடத்தப்பட்டனர்.

அமந்தா ஸ்மித், அடிமைகளாக வாழ்ந்த கறுப்பு இன பெற்றோரின் மகளாக பிறந்தார். தனது குடும்பத்தை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுக்க முயன்ற தந்தையின் முயற்சி ஏதும் பலன் தரவில்லை. ஆனால் ஆண்டவரின் சித்தப்படி, அவரது எஜமாட்டியின் கண்களில் தயவு கிடைத்தது. குடும்பமானது அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றது.

1856ஆம் ஆண்டு, தேவனுக்கு தன்னை அர்ப்பணித்தார். 1863ஆம் ஆண்டு, ஜேம்ஸ் ஸ்மித் என்ற கர்த்தருடைய ஊழியரை மணந்தார். ஆண்டவர் தன்னை ஊழியத்திற்கு அழைப்பதை உணர்ந்தார். ஆராதனை ஒன்றில் தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்தார்.

தினமும் கைநிறைய சுவிசேஷ கைப்பிரதிகளை எடுத்துக் கொண்டு வீதிகள் தோறும் கொடுக்க ஆரம்பித்தார். தான் காணும் அனைவருக்கும் சுவிசேஷத்தை அறிவித்தார். உயிர்மீட்சி கூட்டங்கள் நடத்தி, மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆன்மாக்களை உயிரடையச் செய்தார். அமந்தாவின் செய்திகள் ஆயிரமாயிரம் பேரை தொட்டது.


1878ஆம் ஆண்டு நண்பர்களின் உற்சாகமான தூண்டுதலினால் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்று, கெஸ்விக் கன்வென்ஷன் கூட்டங்களில் பிரசங்கிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். அயர்லாந்து, ஸ்காட்லாந்து மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப்பயணம் செய்து, நற்செய்தியை அறிவித்தார்.

இந்தியாவிற்கு திரும்பிய இவர், ஏழை எளிய மக்களின் நலனுக்காக பாடுபட்டு, கோலார் என்ற இடத்தில் அனாதை குழந்தைகள் இல்லம் ஒன்றை அமைத்தார். ஆப்பிரிக்க நாட்டில் எட்டு ஆண்டுகள் பணி செய்த இவர், கறுப்பு இன மக்களுக்காக தொழிற்கூடம் ஒன்றை கட்டி, வேலை வாய்ப்பினை அளித்தார். மக்களின் உயர்வுக்காக தன்னை அர்ப்பணித்த இவர், ஒவ்வொரு மனிதரிலும் இறைவனைக் கண்டார்.

**அன்பரே! உங்கள் நேரங்களை ஆண்டவர் பணிக்காக எவ்விதம் செலவிடுகின்றீர்கள்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நாம் கர்த்தருக்கு கீழ்ப்படியும் போது, அதன் முழு பொறுப்பும் அவரைச் சார்ந்தது. — ஹட்சன் டெய்லர்**

நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பிப்ரவரி 15



## போலி கார்ப்
## 69 - 156

### விசுவாசத்தில் உறுதிபடுங்கள்

பெப்ரவரி 23 கம்பத்தில் கட்டப்பட்டவராக விறகுகள் சூழ்ந்திருக்க, எரித்துக் கொல்லப்படு வதற்குத் தயார் நிலையில் நின்று கொண்டிருந்தார் 86வயது முதியவர். உள்ளத்திலோ அவர் இளைஞர்.

விசுவாசத்தில் வீரம் நிறைந்தவர். தூய யோவானின் சீடர். மரணத்தைக் கண்டு பயப்படாதவர். கிறிஸ்துவினிமித்தம் துன்பப்படுவதை இன்பமாக எண்ணியவர். அவர் தான் சிமிர்னா பேராயர் போலிகார்ப்.

கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட காலம் அது. இராயனை கடவுள் என்று வணங்கக் கட்டளையிடப்பட்ட வேளை. இராயனை வணங்காதவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிங்கத்திற்கு இரையாகப் போடப்பட்டனர். கிறிஸ்துவைப் பின்பற்றியதால் பலவித சித்திரவதைகளுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளாயினர்.

போர்வீரர்கள் போலிகார்ப்பை பிடித்தனர். தரதரவென இழுத்து வந்தனர். விசாரணைகள் விலாவாரியாக நடந்தன. கிறிஸ்துவைப் பின்பற்றியது மட்டுமே குற்றம். கிறிஸ்துவை மறுதலித்தால் விடுதலை.

போலிகார்ப்பிடம் எந்த பயமுறுத்தல்களும் பயனளிக்கவில்லை. கிறிஸ்துவை மறுதலிக்கக் கூறியவர்களிடம் கிறிஸ்துவின் அன்பினை அழகுற எடுத்துக் கூறினார்.


தன் முடிவு நெருங்கிவிட்டதை உணர்ந்தார். கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியுடனும் தெளிவுடனும் இருக்கும்படி கேட்டுக் கொண்டார். மறைமுகக் கிறிஸ்தவர்கள் மனதுக்குள் அழுதனர். துயரத்தை எப்படி வெளிக்காட்டுவது என தயங்கினர். வெளிப்படையாகத் தெரிந்தாலோ அவர்களுக்கும் அதோ கதிதான்.

பேராயர், தான் இரத்த சாட்சியாக மரிக்கும் முன் தனக்கு இப்படிப்பட்ட மரணத்தைத் தந்த தேவனைத் துதித்தார். சற்று நேரத்திற்குள் அவர் உடலை தீ சூழ்ந்து நின்றது. அவர் முகமோ தேவதூதரைப் போல ஜொலிக்க தேவலோகம் சென்றார்.

**அன்பரே! போலிகார்ப்பை போன்ற விசுவாசம் உம்மிடம் உள்ளதா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: எந்த ஒரு கிறிஸ்தவனும் தனது ஆவிக்குரிய நிலையைப் பற்றிய சுய திருப்தி கொள்ளக்கூடாது.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பிப்ரவரி 23**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




போதகர் வேதநாயகம் மகாராஜா




**நீதிமொழிகள் 28:13 தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்: அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.**

இது அநேகருக்குப் பழக்கப்பட்ட வார்த்தை. தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் என்று அறிந்து அடிக்கடி பாவ அறிக்கையெல்லாம் நாங்கள் செய்திருக்கின்றோம். சிலவேளை நாங்கள் சிந்திக்கின்றோம்: பாவத்தோடு இருக்கின்ற அநேகர் எவ்வளவோ ஆசீர்வாதமாய் இருக்கின்றார்கள், பாவம் செய்கின்ற அநேகர் சுகித்திருக்கின்றார்கள், அதை எங்களுடைய கண்களாலே காணக்கூடியதாக இருக்கின்றதே, தேவனை அறிந்தவர்கள் கூட சிலவேளை பாவம் செய்து கொண்டிருக்கலாம். அவர்களுடைய வாழ்க்கையிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆசீர்வாதம் இருக்கின்றது, இப்படிப் பார்க்கின்ற போது இந்த வசனத்தைக் குறித்த ஒரு கேள்வி எழும்பலாம். ஆனால் இந்த வசனம் பெரும்பாலும் எங்களுடைய நித்திய வாழ்வைக் குறித்துப் பேசுகின்றது. அப்படியென்றால் பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். உண்மைக்கு நாம் இந்தப் பூமியிலே வாழ்கின்ற வாழ்வு ஒரு கொஞ்சக்கால வாழ்வு. ஆனால் நித்திய வாழ்வு தான் நிரந்தரமான வாழ்வு. நாம் பாவத்தை மறைத்து அறிக்கை செய்யாமல், பாவ மன்னிப்பை பெறாமல் இருக்கின்ற போது வாழ்வடையமாட்டோம். எங்களுக்கு நித்திய வாழ்வு கிடைக்காது: நித்திய மரணம் தான் கிடைக்கும்.

எனவே இந்த அறிக்கையைக் குறித்த சரியான உணர்வை நாங்கள் கொண்டிருக்கின்ற போது எங்களுடைய வாழ்வுக்கு இந்த உலகத்தின் ஆசீர்வாதத்தையும் கர்த்தர் தருவார். எல்லாவற்றுக்கும் மேலாய் ஒரு நித்திய வாழ்வை தேவன் எங்களுக்குத் தருவார், அவர் எங்களுக்கு இரக்கம் செய்வார். அதனைத் தான் வேதம் சொல்கின்றது. இந்த வசனம் எங்களுக்கு தெரிந்த வசனம் ஆனால் இதை நாங்கள் கொண்டிருக்கின்றோமா? என்பது கேள்விக்குறியே. எனவே வேத ஆதாரத்தோடு சிலருடைய வாழ்க்கையைக் குறித்து ஆராய்ந்து பார்க்கலாம். அறிக்கை செய்து ஆசீர்வாதிக்கப்பட்டவர்கள் அல்லது அறிக்கை செய்து வாழ்வடைந்தவர்கள் உண்டு. அதுபோல சரியான அறிக்கை செய்யாமல் தேவனை விட்டுபோனவர்களும் உண்டு. அறிக்கை என்று பார்க்கின்ற போது நாங்கள் செய்த தவறை அல்லது பாவத்தை செய்த வண்ணமாகவே சொல்வது. அதற்காக பாவத்தை திரும்ப செய்து காட்டுவது அல்ல, பாவ அறிக்கையில் மறைத்தல் இல்லை. ஏதாவது ஒன்றை மறைத்து சொல்கின்றோமென்றால் அது அறிக்கை அல்ல. அது தேவனாலே ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

## 01. மனிதனுடைய பொதுவான பார்வையில் சிறிய பாவம், ஆனால் மன்னிப்பை பெறத்தக்கதாக அறிக்கை செய்யப்படவில்லை.

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தார்கள். ஆனால் தேவனிடமிருந்து மன்னிப்பை பெற்றுக் கொள்கின்ற ஒரு தருணத்தை இழந்துவிட்டார்கள். ஆண்டவர் ஆதாமை உண்டாக்கி ஏவாளை அவனுக்கு கொடுத்து ஏதேன் தோட்டத்திலே அவர்களுக்கு சொன்னார்: தோட்டத்திலே இருக்கின்ற எல்லாக் கனிகளையும் புசிக்கலாம். ஆனாலும் ஒரு மரத்தைக் காண்பித்து இந்த மரத்தின் கனியை மாத்திரம் புசிக்க வேண்டாம் என்றார். தேவன் கொடுத்த கட்டளைக்கு மாறாய் பிசாசு வந்து என்ன செய்தான்? அவளை அவன் வஞ்சித்தான். தேவன் இந்தப் பழத்தை சாப்பிடக்கூடாது என்று சொன்னாரோ என்று கேட்டான். ஏவாள் சொன்னாள்: அதை சாப்பிடவும், தொடவும் கூடாது என்று தேவன் சொன்னார். அதற்கு சர்ப்பம் கூறியது: இல்லை, நீ இதை சாப்பிடு, இதைச் சாப்பிட்டால் நீ தேவனைப் போன்று வருவாய் **(ஆதியாகமம் 2:16, 3:1-6).**

அதனைக் கேட்ட ஏவாள், அதைப் பார்த்தாள்: அது பார்வைக்கு இன்பமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புசிப்புக்கு நன்றாய் இருக்கும் என்று தெரிந்து பிடுங்கி தானும் சாப்பிட்டு தன் கணவனுக்கும் கொடுத்தாள். ஆதாமும் பாவம் செய்தான். இந்தப் பாவத்தை தோற்றத்தின்படி நாங்கள் பார்த்தால் சாப்பிட வேண்டாம் என்பதனை சாப்பிட் டார்கள். இது பெரிய பாவமா? என்று நாங்கள் சிந்திக்கலாம். நாங்கள் சாப்பாட்டு வேளைகளிலே யாரையும் பேசமாட்டோம், சாப்பாட்டு வேளைகளில் யாரையும் அடிக்கமாட்டோம். ஏனென் றால் சாப்பாட்டுவேளை என்பது ஒரு மரியாதைக்குரிய வேளையாகவே பெரும் பாலும் கணிப்பார்கள். அது போல தேவனும் ஆதாம் ஏவாளுக்கு இந்த விடயத்தில் ஒரு சிறிய இரக்கத்தைக் காட்டியிருக்கலாம்தானே. ஏனென்றால் அதை அவர்களாய் சென்று சாப்பிட வில்லை, சத்துருதானே வஞ்சித்தான்.

இது போன்று தேவன் இரக்கம் காட்டியிருக்கலாம் என்பதற்கு இன்னொரு காரணம்: இவர்கள் தான் முதலாவது மனிதர்கள். இதற்கு முன் வேறு யாரா வது மனிதர்கள் வாழ்ந்தார்களா? இவர் கள் அவர்களைப் பின்பற்றி வாழ்வதற்கு இல்லை, இவர்கள் தான் முதலாவது மனிதர்கள். முதல் மனிதன் செய்த இந்த காரியத்தை கருத்திலே எடுக்காமல் விட்டிருக்கலாம். இதனை தேவன் மன்னித்துவிட்டிருக்கலாம் தானே. கர்த்தர் பாவத்திற்கு ஒரு சிறிய இடமும் கொடுக்கமாட்டார், மனிதர்களுடைய பார்வையிலே தோற்றத்தின் படி ஒரு சாதாரண காரியம் போன்று இருக்க லாம். இது ஒரு சிறிய தவறாய் இருக் கலாம். ஆனால் தேவனோ பாவத்தை பாவமாகவே பார்த்தார்.

பாவத்திற்கு இரக்கம் காண பிக்கக்கூடாது. ஆண்டவர் ஆதாம் ஏவாளை எவ்விதம் உண்டாக்கினார்? பூமியின் மண்ணை எடுத்து மனித தோற்றத்தை உருவாக்கி, அவர்களுக்கு ஜீவசுவாசத்தைக் கொடுத்தார். அதற்கு பிற்பாடு வந்தவர்கள் இவர்கள் மூல மாய் வந்த சந்ததிகள். தேவன் ஒன்றை சிந்தித்திருக்கலாம் என்னுடைய கரத் தாலே தான் நான் இவனை உருவாக்கி னேன், இந்த விடயத்தில் இவனை மன்னித்து இவனைத் துரத்தாமல் விடுவோம் என நினைக்கவில்லை. ஆண்டவர் சிருஷ்டித்த சிருஷ்டிப்பிற்குள் ளேயே சிறந்த சிருஷ்டி இவன் தான். இந்த திறமான மனிதனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கலாம் தானே, இன்று பாவம் செய்த மனிதர்களைக் கூட பல கிறிஸ்தவர்கள் பார்க்கும் விதங்கள் வித்தியாசமானவைகள். எமக்கு நெருங்கியவர்கள் பாவம் செய்தால் அது பரவாயில்லை; ஆனால் எமக்கு பிடிக்காதவர்கள் பாவம் செய்தால் தண்டிக்கப்படவேண்டும். என் பிள்ளை பாவம் செய்தால் கர்த்தர் பார்ப்பார்; இன்னொருவருடைய பிள்ளை பாவம் செய்தால் அப்படிச் செய்திருக்கக் கூடாது. என்னுடைய மனைவி பாவம் செய்தால் அது நன்மைக்காக செய்திருக் கிறார்; இன்னொரு பெண் செய்தால் அவர்களெல்லாம் பெண்ணா? எத்தனை விதமான பிரதிபலிப்புக்கள். தேவன் எதிர்பார்க்கும் கண்ணோட்டத்துடன் பார்க்கத் தெரியாதவர்கள் வீழ்ந்து போனவர்கள் அல்லது வீழ்வதற்கு ஆயத்தமாய் இருப்பவர்கள். ஆண்டவர் விசேஷித்தது, சிறந்தது எனப் பார்ப் பதில்லை. பாவம் என்றால் அதைப் பாவமாகவே பார்க்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏதேன் தோட்டத்திற்கு வந்த ஆண்டவர் இவர்களைக் காணாமல் கேட்கின்றார், ஆதாமே நீ எங்கே இருக் கின்றாய்? வழமையாக சேர்ந்து உலாவு பவர்களை இன்று காணவில்லை. அவர்கள் அந்த விருட்சங்களுக்குள்ளே மறைந்து இருந்தார்கள். ஆதாம் ஆண்ட வருக்கு கூறுகின்ற பதில்: தேவரீருடைய சத்தத்தைக் கேட்டு, நான் நிர்வாணி யாய் இருப்பதினால் பயந்து ஒளித்துக் கொண்டேன். அப்பொழுது ஆண்டவர் கேட்கின்றார்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? நான் புசிக்கவேண்டாம் என்று விலக்கின விருட்சத்தின் கனியை புசித்தாயோ? இங்கு தான் பாவ அறிக்கைக்கான சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது. அறிக்கை செய்யப்பட வேண்டிய நேரம் இது தான். ஆண்டவர் நீ எங்கே இருக் கின்றாய்? என்று கேட்ட போதே இவன் கூறியிருக்க வேண்டும், ஆண்டவரே நீர் புசிக்கவேண்டாம் என்று விலக்கின விருட்சத்தின் கனியை நான் புசித்து நீர் கூறிய கட்டளையை மீறி பாவம் செய்து விட்டேன் என்னை மன்னியும். இந்த ஒரு வசனம் அந்த நேரத்திலே ஆதாமாலே சொல்லப்படவில்லை. அடுத்த சந்தர்ப் பம் கொடுக்கின்றார்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? அதில் கூட அவன் சொல்லவில்லை, நீர் சாப்பிடக்கூடாது என்று சொன்ன கனியை சாப்பிட்டுவிட்டேன் என்னை மன்னியும். ஆனால் ஆதாம் என்ன சொன்னான்: தேவரீர் தந்த ஸ்திரியானவள் அவ் விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத் தாள், நான் புசித்தேன் என்றான்.

இது உண்மை தான் ஆனால் தான் பாவம் செய்துவிட்டேன் என்பதைக் காண்பிக்காத உண்மை. தான் வீழ்ந்து போனேன் என்பதை மறைக்கும் உண்மை. ஏவாள் சொன்னதும் உண்மை தான்: 'சர்ப்பம் என்னை வஞ்சித்தது' தான் வீழ்ந்து போனதை ஏற்றுக்கொள்ளா மல் சொல்லும் உண்மை. ஆண்டவர் ஸ்திரீயிடம் கேட்ட போது அவள் சொன்னாள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது. இங்கே நாம் பார்ப்பது இங்கு நடந்த அந்த பாவத்திற்கு உரிய பாவ அறிக் கையை ஆதாமோ, ஏவாளோ செய்ய வில்லை. எங்களுடைய பார்வையின்படி ஒரு சிறிய பாவம் தான் ஆனால் அறிக்கை சரியானதாக அமையவில்லை. இந்தக் காரியம் இல்லாததினாலே அந்தகாரம் அவர்களையும் சூழ்ந்தது. அவர்களுக்கு பின்பதாக வந்த எல்லா மனுக்குலத்தையும் அந்த பாவம் சூழ்ந் தது. முழு உலகத்தையும் அந்தகாரப் படுத்திவிட்டது **(ஆதியாகமம் 3:8-13).**

இன்னொரு விடயம் இங்கே கவனிக்கப்பட வேண்டும்: **இந்த சிறிய பாவமே இந்த முழு உலகத்தையும் கறைபடுத்துமென்றால்; நாங்கள் செய்கின்ற பாவங்களும் எங்களுடைய குடும்பங்களைக் கறைப்படுத்தும்.** நாம் ஒருவர் பாவம் செய்து அந்தப் பாவத்திற் காய் சரியாய் மன்னிப்பு கேட்காதவிடத்து எங்களை நம்பி எதுவெல்லாம் இருக் கின்றதோ அதுவெல்லாம் கறைபடக் கூடியதாய் போய்விடும். ஒரு சிறிய பழத்தை சாப்பிட்ட பாவமே பெரிய அந்தகாரத்தைக் கொண்டு வந்ததென் றால் நாங்கள் தெரிந்து செய்கின்ற பாவங்கள் எத்தனை? சில மனிதர்கள் சொல்வார்கள்: என்னாலே ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கின்றது, ஜெபிக்க முடியாமல் இருக்கின்றது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேதம் வாசிக்க முடியாமல் இருக்கின்றது, அந்தகாரம் என்னை சூழ்ந்து கொள்வது போல் இருக்கின்றது. குடும்பத்தில் சமாதானம் இல்லை, எனக்குள் ஒரே குழப்பம் என எண்ணலாம். செய்த பாவத்திற்கு சரியான அறிக்கை செய்யாது விட்டால், எம்மை அந்தகாரம் சூழ்ந்து விடும். சரியான ஒரு அறிக்கையை செய்யவில்லை, மன்னிப்பு பெறவில்லை, இதனால் தேவ பிரசன்னத்தை ஆதாம் இழந்தான். ஏதேனை விட்டு அவன் வெளியேற்றப்பட்டான். எங்களுடைய வாழ்வில் சில இழப்புகளுக்குக் காரணம்: **செய்த பாவத்தை சரியாய் அறிக்கை செய்யாமல் இருப்பதே.**

உதாரணமாக, நாம் ஒருவருடைய ஒரு பொருளை களவெடுத்து அதை யாருக்கும் தெரியாமல் விற்பனை செய்துவிட்டால், சில நாட்கள்.... சில காலங்கள்... கடந்து செல்கின்றது. உள்ளத்திலே ஒரு குற்ற உணர்வு வருகின்றது. அந்த நபர் பாவம், நான் அவருக்கு இப்படிச் செய்துவிட்டேனே என்று துக்கப்பட்டு அந்த நபரிடம் சென்று: சகோதரனே, உங்களை நான் நோகப் படுத்திவிட்டேன் என்று சொன்னால். அப்பொழுது அவர் சிந்திப்பார்: இவர் எப்படி, எப்பொழுது என்னை நோகப் படுத்தினார்? இன்னும் யார் அவருடைய பொருளை களவெடுத்தது என்று அவருக்குத் தெரியாது. பின்பும் எனக்கு நின்மதி இல்லை, எனவே அடுத்த நாள் அவரிடம் சென்று: உங்களுக்கு சொற்ப செலவு வைத்துவிட்டேன் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்... இப்படி கூறிய பின்பு அந்த நபர் இவர் எனக்கு என்ன செலவு வைத்துவிட்டார்? என்று சிந்திப்பார். இப்படி மாறி மாறி ஏதாவது ஒன்றை சொல்லக்கூடாது இப்படி நாம் சொல்வதினாலே நான் செய்த இந்தப் பாவம் மன்னிக்கப்படமாட்டாது. அறிக்கை என்று சொல்கின்ற போது: நான் என்ன சொல்லவேண்டுமென்றால், சகோதரனே நான் உங்களுடைய இந்தப் பொருளை நீங்கள் இல்லாத நேரத்தில் களவெடுத்து விற்பனை செய்துவிட்டேன், பாவம் செய்துவிட்டேன் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இது தான் உண்மை யான அறிக்கை. இல்லையென்றால் நீங்கள் சுற்றி சுற்றி என்ன கூறினாலும் அது மன்னிக்கப்படமாட்டாது.

சிலவேளைகளில் சிந்திக்கின்றோம்: நாம் அவருக்கு விரோதமாகச் செய்த காரியத்தை ஈடுசெய்யும்படியாக அவருடைய வீட்டிற்குச் சென்று அவருடன் உறவாடிவிட்டு வந்தால் எல்லாம் சரியாகி விடும் என்று எண்ணுகின்றோம், இது அறிக்கை அல்ல. இவையெல்லாம் எங்களுடைய பாவத்தை நாங்கள் மறைக்கின்ற செயல். அறிக்கையென்றால்செய்தபாவத்தை அப்படியே சொல்வது. ஆதாமும் ஏவாளும் செய்ததை சொல்வதற்கு பதிலாய் சுற்றி சுற்றி ஒவ்வொரு கதையைக் கூறினார்கள். அதை சரியாக அவர்கள் அறிக்கை செய்ய வில்லை. எங்கள் பார்வையிலே அது ஒரு சிறிய பாவம். அவர்கள் மன்னிப்பு பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை இழந்தார்கள். பிரியமானவர்களே, நீங்கள் ஏதாவது பாவம் செய்தால் அதை நேரே சொல்லுங்கள். சில வேளை அது உங்கள் குடும்ப அங்கத்தவருக்கு விரோதமாய் நீங்கள் செய்த காரியமா யிருக்கலாம். அதனை அவர்களிடம் அப்படியே சொல்லுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அடுத்து நாம் யூதாசை எடுத்துக் கொள்வோம். இந்த யூதாஸ் செய்த பாவம் என்னவென்றால், கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்தான். காட்டிக் கொடுத்த பிற்பாடு இயேசுவை அடித்து அவர்கள் துன்புறுத்துகின்ற போது அவனுக்குள்ளே ஒரு உணர்வு வந்து சொல்கின்றான். நான் குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டேன். யூதாஸ் தான் பெற்றுக் கொண்ட பணத்தை எடுத்துச் சென்று வேதபாரகரிடம் இதனைச் சொல்கின்றான். அதற்கு அவர்கள் சொன்னார்கள்: அது உன்னுடையபாடு. அதை அவனால் தாங்கிக் கொள்ள முடியாமல் அவன் என்ன செய்கின்றான்? தான் வைத்திருந்த பணத்தை எறிந்துவிட்டுப் போய் குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டேனே என்ற குற்ற உணர்வோடு மரத்திலே கயிற்றைப் போட்டு அதில் தொங்கி இறந்து போகின்றான். இதை யூதாஸ் உணர்ந்தான், ஆனால் இருதயத்தில் ஒரு அறிக்கையை அவன் செய்யவில்லை. இவன் இயேசுவோடு இருந்த நாட்களில் இயேசு பாவங்களை மன்னித்த எத்தனையோ சந்தர்ப்பங்களைக் கண்டிருக்கின்றான், விபச்சாரத்திலே கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்ட ஸ்திரி மன்னிப்பு பெற்றதைக் கண்டிருக்கலாம். திமிர்வாதக்காரன் சுகம் பெற்றுச் சென்றதைக் கண்டிருக்கின்றான். இயேசு சொன்னார்: போ இனிப் பாவம் செய்யாதே! பாவத்தை மன்னிக்கிறவர் தேவன் என்று அவனுக்குத் தெரியும். அந்த அறிவு அவனுக்கு இருந்தது. குளத்தருகே 38 வருடங்கள் படுத்திருந்தவனை இயேசு பார்த்து: போ, இனிப் பாவம் செய்யாதே! என்று சொல்லி சுகமாக்கியதை கண்டவன். ஆனால் அவன் ஒன்று செய்யவில்லை, தான் செய்தது பாவம் என்பதனை இயேசுவிடம் அறிக்கை செய்யவில்லை. இந்தப் பாவத்தை அறிக்கை செய்யாததினாலே ஆதாமும் ஏவாளும் ஏதேனை விட்டு துரத்தப்பட்டார்கள். பாவ அறிக்கையை சரியாய் செய்யாததின் நிமித்தமாய் யூதாஸ் போய் மாண்டுபோனான்.

பாவ அறிக்கையில் சரியாய் தேவன் எதிர்பார்க்கின்ற அந்த சொல்லை சொல்லாமல் ஆயிரம் வார்த்தைகளை சொன்னாலும் அது கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படுவது கஷ்டம். ஒரு உணர்வு வந்து அறிக்கை செய்யப்படாவிட்டால் அது வேத ஆதாரத்தின்படி மன்னிக்கப்படுவது கடினம். நீங்கள் ஏதாவது ஒரு பாவம் செய்திருந்தால், யாருக்கு விரோதமாயாவது செய்திருந்தால் அந்த நபரிடம் சென்று அதை சொல்லி அறிக்கை செய்ய வேண்டும். இல்லையென்றால் வேத ஆதாரத்தின்படி அது அறிக்கையல்ல. அறிக்கை செய்யப்படாவிட்டால் மன்னிப்பு இல்லை. நாங்கள் பிறந்தது முதல் தேவனை அறியும் வரைக்கும் எத்தனையோ பாவங்கள் செய்திருக்கலாம். இரட்சிக்கப்படுகின்ற நாளிலே தேவனிடத்திலே நான் ஒரு பாவி என்று சொன்ன போது கர்த்தர் அதை ஏற்று மன்னிப்பை தந்திருக்கலாம். தேவனை அறிந்த பிற்பாடு தேவனுக்குள் வாழ்கின்ற நாம் தேவனைத் தெரிந்தவர்கள். அவரால் உருவாக்கப்பட்ட முதல் மனிதன் தேவனோடு உலா வருகிறவன், தேவனுடைய சீடனாயிருந்த யூதாஸ் இவர்களுடைய விடயத்தில் கர்த்தர் அவர்கள் அறிக்கை செய்யாமல்விட்டதினாலே அவர்களை மன்னிக்கவில்லை. இரட்சிக்கப்பட்ட நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும். சரியான அறிக்கையை நாம் செய்யா விட்டால் எங்களுக்கு மன்னிப்பு கிடைக்கும் என்பது சந்தேகமே. எனவே எந்தக் காரியம், எங்கே தவறவிட்டோம் என்பதை சொல்லி அறிக்கை செய்ய வேண்டும். இந்த இரண்டு மனிதர்களும் தேவன் விரும்பின அந்த அறிக்கையை செய்ய வில்லை. ஆயிரம் வார்த்தை சொல்லி தேவன் விரும்புகின்ற ஒரு வார்த்தை சொல்லாவிட்டால் சில வேளை மன்னிப் பில்லை.

## 02. பார்வைக்கு பெரிய பாவம், ஆனால் மன்னிப்பை பெறத்தக்கதாக இவன் அறிக்கை செய்தான்

வேதாகமத்தில் எல்லோருக்கும் தெரிந்த ஒரு கதாபாத்திரம் தாவீது. இந்த தாவீதை ஆதாம் ஏவாள் செய்த பாவத்தோடு ஒப்பிடும் போது ஆதாம் ஏவாள் செய்த பாவம் ஒரு சிறிய பாவம். சிறிய காரியத்தில் தவறிய ஆதாம் ஏவாளுக்கு மன்னிப்பு கிடைக்கவில்லை, ஆனால் பெரிய காரியங்களில் தவறிய தாவீதுக்கோ என்ன நடந்தது? இந்த தாவீது தான் நினைத்து, தான் திட்டம் போட்டு பாவத்திலே விழுந்தான். தாவீது செய்த பாவம் என்ன? உரியாவினுடைய மனைவியை தன் மனைவியாய் எடுத்தது பாவம். அடுத்தது உரியாவைக் கொலை செய்தது பாவம். இந்தக் காரியங்களை செய்த பிற்பாடு தாவீது அமைதியாய் இருந்துவிட்டான். இதை நாம் பார்க்கும் போது இது பார்வைக்கு பெரிய பாவம். ஆனால் மன்னிப்பை பெறத் தக்கதாக இவன் அறிக்கை செய்தான்.

**11சாமுவேல் 11:27 துக்க நாள் சென்றபின்பு, தாவீது அவளை அழைத் தனுப்பி, தன் வீட்டிலே சேர்த்துக்கொண் டான்: அவள் அவனுக்கு மனைவியாகி, அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். தாவீது செய்த இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது.** இவன் செய்த இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பாயிருந்தது. இவர் தான் செய்த பாவம் யாருக்கும் தெரியாது என நினைத்தார். பத்சேபாளை தனக்கு மனைவியாக்கி யுத்தத்திற்கு சென்றிருந்த அவளுடைய கணவனாகிய உரியாவை அழைத்து, உரியா தாவீதினிடம் வந்த போது **11சாமுவேல் 11:7-9 (7.) உரியா அவனிடத்தில் வந்த போது, தாவீது அவனைப் பார்த்து: யோவாப் சுகமாயிருக் கிறானா, ஜனங்கள் சுகமாயிருக்கிறார் களா, யுத்தத்தின் செய்தி நற்செய்தியா என்று விசாரித்தான். 8. பின்பு தாவீது உரியாவை நோக்கி: நீ உன் வீட்டிற்குப் போய், பாதசுத்தி செய் என்றான். உரியா ராஜ அரமனையிலிருந்து புறப்பட்ட போது, ராஜாவினிடத்திலிருந்து உச்சித மான பதார்த்தங்கள் அவன் பின்னாலே அனுப்பப்பட்டது. 9. ஆனாலும் உரியா தன் வீட்டுக்குப் போகாமல், ராஜ அரமனையின் வாசலிலே தன் ஆண்டவனுடைய எல்லாச் சேவகரோடுங் கூடப்படுத்துக்கொண்டி ருந்தான்.** அவன் இவ்விதமான காரியங் களைச் சொல்லி தான் செய்த பாவம் பிடிபடக்கூடாது என்பதற்காய் உச்சிதமான பதார்தங்களை அவன் பின்னாலே அனுப்பி வீட்டுக்கு செல் என்று சொல் கின்றான். அவனோ வீட்டுக்கு செல்ல மறுக்கின்றான் **11சாமுவேல் 7:11 உரியா தாவீதை நோக்கி: பெட்டியும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**இஸ்ரவேலும் யூதாவும் கூடாரங்களிலே தங்கி, என் ஆண்டவனாகிய யோவாபும் என் ஆண்டவனின் சேவகரும் வெளியிலே பாளயமிறங்கியிருக்கையில், நான் புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் என் மனைவியோடே சயனிக்கிறதற்கும், என் வீட்டிற்குள் பிரவேசிப்பேனா? நான் அப்படிச் செய்கிறதில்லை என்று உம்முடைய பேரிலும் உம்முடைய ஆத்துமாவின் பேரிலும் ஆணை யிட்டுச் சொல்கிறேன் என்றான்.**

நாமும் சில வேளைகளில் எங்களுடைய பாவங்களை மறைப்பதற் காக மற்றவர்களுக்கு உச்சிதமான பொருட்களைக் கொடுப்போம். நாங்கள் கொடுக்கும் பொருட்கள் பாவத்தை மன்னிக்காது. பணம் பாவத்தை மன்னிக் காது. சிலர் ஒரு சாட்சி சொன்னால்: எங்களுடைய பாவங்கள் மன்னிக்கப் பட்டுவிடும் என்று சிந்திக்கின்றார்கள். செய்த பாவத்தை சொல்லாமல் மற்றவர் கள் நான் பாவத்தை அறிக்கை செய்து விட்டேன் என்பதனை பார்க்கட்டும் என் பதற்காக சொல்வார்கள். சிலர் தாங்கள் இன்னொரு நன்மையைப் பெறவேண்டும் என்பதற்காக ஒரு பாவத்தை வைத்துக் கொண்டு வேறொரு பாவத்தை அறிக்கை செய்வார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கைக்குள் இருக்கின்றது இன்னொரு பாவம். அந்தப் பாவத்தை மறைப்பதற் காக இன்னொரு பாவத்தை சொல்வார் கள். தாவீது ராஜா உரியாவை வீட்டிற்கு செல்லும்படி சொல்கின்றான், உரியா அப்படியே வீட்டிற்கு செல்லவில்லை. இதையறிந்த தாவீது சொல்கின்றான்:

**11சாமுவேல் 11:12 அப்பொழுது தாவீது உரியாவை நோக்கி: இன்றைக்கும் நீ இங்கேயிரு. நாளைக்கு உன்னை அனுப்பி விடுவேன் என்றான்: அப்படியே உரியா அன்றும் மறுநாளும் எருசலே மிலே இருந்தான்.** இந்த வசனம் ஒரு வஞ்சனை நிறைந்த வசனம். ஒரு கடிதம் ஒன்றை எழுதியனுப்புகின்றான். யோவாப் படைத்தளபதியிடம் செய்தி செல்கின்றது, இந்தக் கடிதத்தோடு வரும் உரியாவை எங்கு யுத்தம் மும் முரமாய் நடக்கிறதோ அங்கே அவனை நிறுத்தி சண்டையின் போது நீங்கள் எல்லோரும் பின்வாங்குங்கள். உரியா கடிதம் கொடுக்கும் படியாய் கொண்டு செல்கின்றான்.

நாங்கள் என்றால், செல்லும் வழியில் வைத்தே கடிதத்தை பிரித்து பார்த்திருப்போம். இதில் என்னைக் கொலை செய்யும்படி எழுதியிருக்கின் றது, நாம் எங்கேயாவது தப்பிச் சென்று விடலாம் என்று சொல்லி தப்பிச் சென்றி ருப்போம். ஆனால் இந்த உரியா அவன் நீதிமான், அவன் நேர்மையானவன், உண்மையுள்ள ஒரு உக்கிராணக்காரன். கொடுத்ததை நம்பிக்கைத்துரோகம் செய்யாமல் காத்துக் கொண்டவன். தன் உயிர் போகின்ற காரியத்திலும் அவன் உண்மையுள்ளவனாய் இருந்தான். இதன்படியே யோவாப் மும்முரமாய் யுத்தம் நடக்கின்ற இடத்திலே உரியாவை நிறுத்தினான். உரியா இறந்தான்.

ஆதாம் ஏவாள் செய்த பாவத் தோடு இதை ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்கள் செய்த பாவம் எத்தனையோ மடங்கு சிறிய பாவம். இந்த தாவீது ராஜாக்கள் யுத்தத்திற்கு செல்ல வேண் டிய சந்தர்ப்பத்தில் உப்பரிகையில் நடந்தது ஒரு பாவம். அடுத்து அந்தப் பெண்ணைப் பார்த்து இச்சித்தது பாவம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வீட்டுக்கு அழைத்தது பாவம். அவளோடு தகாத வகையில் நடந்தது பாவம், அதற்காக வஞ்சனையாய் உரியாவை அழைத்தது பாவம், ஒரு நீதிமானைக் கொலை செய்ய வஞ்சனையாய் திட்டம் தீட்டியது பாவம், அவனைக் கொலை செய்தது பாவம். இவ்வளவு பாவங்களை செய்த தாவீதுக்கு மன்னிப்பு கிடைத்தது, அது எவ்விதம் கிடைத்தது என்பதனைப் பார்ப்போம். தாவீது தான் செய்த இந்தக் காரியம் யாருக்கும் தெரியாது என சிந்தித்தான்.

ஆனால் தேவன் தாவீதுடைய பாவத்தை உணர்த்தும்படியாய் நாத்தானை அனுப்புகின்றார். நாத்தான் தாவீதினிடமாய் சென்று ஒரு சம்பவத்தைக் கூறி அதற்கூடாகத் தாவீதின் பாவத்தை சுட்டிக்காட்டுகின்றான்.

**11சாமுவேல் 12:1-14 (1.) கர்த்தர் நாத்தானைத் தாவீதினிடத்தில் அனுப்பினார்; இவன் அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள்; ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரித்திரன். 2. ஐசுவரியவானுக்கு ஆடுமாடுகள் வெகு திரளாயிருந்தது. 3. தரித்திரனுக்கோ தான் கொண்டு வளர்த்த ஒரே ஒரு சின்ன ஆட்டுக்குட்டியைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது; அது அவனோடும் அவன் பிள்ளைகளோடுங் கூட இருந்து வளர்ந்து, அவன் வாயின் அப்பத்தைத் தின்று, அவன் பாத்திரத்திலே குடித்து, அவன் மடியிலே படுத்துக் கொண்டு, அவனுக்கு ஒரு மகளைப்போல இருந்தது. 4. அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான்; அவன் தன்னிடத்தில்வந்த வழிப்போக்கனுக்குச் சமையல் பண்ணுவிக்க, தன்னுடைய ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதில்லாமல், அந்தத் தரித்திரனுடைய ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதைத் தன்னிடத்தில் வந்த மனுஷனுக்குச் சமையல் பண்ணுவித்தான் என்றான். 5. அப்பொழுது தாவீது: அந்த மனுஷன்மேல் மிகவும் கோபம் மூண்டவனாகி, நாத்தானைப் பார்த்து: இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்துக்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன். 6. அவன் இரக்கமற்றவனாயிருந்து, இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனை திரும்பச் செலுத்த வேண்டும் என்றான். 7. அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி: நீயே அந்த மனுஷன்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, உன்னைச் சவுலின் கைக்குத் தப்புவித்து, 8. உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து, உன் ஆண்டவனுடைய ஸ்திரீகளையும் உன் மடியிலே தந்து, இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித்தேன்; இது போதாதிருந்தால், இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன். 9. கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டைபண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக் கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்றுபோட்டாய். 10. இப்போதும் நீ என்னை அசட்டைபண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்ட படியினால், பட்டயம் என்றென்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும். 11. கர்த்தர் சொல்கிறது என்னவென்றால், இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான். 12. நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் என்றார் என்று சொன்னான். 13. அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில்: நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்றான்; நாத்தான் தாவீதை நோக்கி: நீ சாகாத படிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச்செய்தார். 14. ஆனாலும் இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய்ச் சாகும் என்று சொல்லி, நாத்தான் தன் வீட்டுக்குப் போய் விட்டான்.**

தாவீது இந்த கதையைக் கேட்ட போது இப்படிச் செய்தவன், கொலைக்குப் பாத்திரவான், மரணத்திற்கு பாத்திரவான் என்று சொன்ன போது நாத்தான் சொன்னான், நீயே அந்த மனுஷன். உடனே தாவீது என்ன செய்தான்: நான் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தேன் என்றான். பாவம் எவ்வகை யானதாக இருப்பினும் பாவம் அனைத்தும் கர்த்தருக்கு விரோதமானதே. பாவங்கள் அனைத்தும் கர்த்தருக்கு விரோத மானது. கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ ஊழியம் செய்பவர்கள் (ஆண், பெண்) கூட பிரிவினை, மார்க்க பேதங்கள், வஞ்சனை, மற்றவர்களைக் குறித்து நிந்தனை கூறுவது, சிநேகமாயிருக்கும் நண்பர்களைப் பிரித்து விடுவது, அவர்களுக்கு கனம் கொடுக்க வேண்டாம் என்பதை மறைமுகமாய் செயற்படுத்து வது, குற்றமற்றவர்களை குற்றம் செய்த வர்கள் போல விசுவாசிகளுக்கு காண் பிப்பது, குற்றம் செய்தவர்களை பரிசுத்த வான்கள் போல் காண்பிப்பது, ஒழுங்குக் கேடு செய்வது, அதிகார துஸ்பிரயோ கம் செய்வது, நன்மைக்குப் பேசுவது போன்று கோள் சொல்வது, தொடர்ச்சி யாக பொய் பேசிக் கொண்டிருப்பது, பகைமையை உண்டாக்குவது, சகோதரர் களைப் பகைப்பது... போன்ற பல பாவங் களைச் செய்வார்கள். இதெல்லாம் தேவனுடைய ராஜ்யத்திற்காக செய்கி றேன், சபை வளர்ச்சிக்காக செய்கிறேன் என்பார்கள். பாவம் செய்வதனால் தேவனுடைய ராஜ்யம் வளருமென்றால் கிறிஸ்து மரித்தது வீணாகுமே.

**ரோமர் 6:1-2 (1.) ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும் படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே. 2. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?** <u>'எனக்காக நீங்கள் பாவம் செய்யுங்கள் என்று தேவன் சொல்லவேயில்லை'</u> தாவீது ராஜாவுக்கு நன்றாகத் தெரியும் பாவம் அனைத்தும் தேவனுக்கு விரோதமானதென. அவனிடம் இருந்த அழகு இது தான். அவனிட மிருந்த நல்ல குணம் இது தான். அவன் இதற்கு ஒரு சாட்டும் கூறவில்லை. செய்த பாவம் பல பாவம், ஆனால் அதை ஒரு வார்த்தையில் அவன் அறிக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்கின்றான். ஆதாம் செய்த பாவம் ஒரு பாவம்: ஆனால் அவன் கூறிய வார்த்தைகள் அனேகம். அப்படிச் சொல்லியும் அது மன்னிக்கப்படவில்லை. ஏனென்றால் அவர்களிடம் சரியான பாவ அறிக்கை இல்லை. ஆனால் தாவீதினுடைய உள்ளம் தான் செய்ததை அப்படியே ஏற்று, தான் நடப்பித்ததை அப்படியே உணர்ந்து, உணர்ச்சி நிறைந்த உள்ளத்தோடு வந்தது தான் இந்த அறிக்கை. நாங்கள் செய்த காரியத்தை பல வார்த்தைகள் சொல்லி மெழுகாமல் தேவன் எதிர்பார்க்கின்ற அந்த ஒரு காரியத்தைச் சொல்லி அறிக்கை செய்ய வேண்டும். இந்த அறிக்கைதான் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தாவீதுக்கு சில தண்டனைகளை தேவன் கொடுத்தார். அவனுக்கு பத்சேபாள் மூலம் பிறந்த முதலாவது குழந்தையைக் கர்த்தர் அடித்தார். இன்னும் சில காரியங்களை நாத்தான் சொன்னான். அவையெல்லாம் அப்படியே நடந்தது. ஆனாலும் இன்றைக்கு பேசப்படுகின்ற போது, ராஜாக்களைக் குறித்து எழுதுகின்ற போது முன் உதாரணமாய்க் காண்பிக்கின்றவன் இந்த தாவீது. 'தாவீது என் இருதயத்திற்கு பிரியமானவன்' என்று எழுதக்கூடியதாய் இருக்கிறது. 'ஆதாம் விழுகைக்குரிய உதாரணம்; ஆனால் தாவீதைக் குறித்து நாம் பார்க்கும் போது அவன் விழுந்து எழுந்ததற்கு உதாரணம்' ஆதாம் தேவனிடம் கட்டளை பெற்றவன். தாவீது நியாயப் பிரமாணம் தெரிந்தவன். இருவரும் பாவம் செய்தனர், ஆனால் தாவீது மன்னிப்பு பெறத்தக்க அறிக்கை செய்தான்.

தாவீது நேரடியாக பாவத்தை அறிக்கை செய்தான். அதனால் அவன் ஏற்றுக் கொள்ளப்பட்டான். எனவே பெரிய பாவம் செய்ய தேவன் எங்களுக்கு அனுமதி கொடுத்துள்ளார் என்று பொருளல்ல, பாவம் செய்வதற்கு தேவன் அனுமதி கொடுத்திருக்கிறார் என்றும் பொருளல்ல. இவரின் முன் மாதிரியைப் பார்த்து ஒரு சொல்லில் பாவத்தை அறிக்கை செய்தால் சரி என்பதும் பொருளல்ல. தெரிந்து கொண்டும் நாங்கள் பாவம் செய்வோமென்றால் தேவன் முற்றிலுமாக எம்மைக் கைவிட்டுவிடுவார்.

**லூக்கா 18:10-14 (10.) இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்: ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். 11. பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராத தனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். 12. வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்: என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். 13. ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு: தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றான். 14. அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த்தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.**

இந்த உவமையிலே நாம் பார்க்கும் போது பரிசேயன் - ஆயக்காரன் இருவரும் ஜெபம் செய்யும்படி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தேவாலயத்திற்கு சென்றார்கள். பரிசேயன் எவற்றையெல்லாம் சொல்லித் துதிக்கிறான்: நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். அவன் தேவனுடைய மகத்துவங்களைச் சொல்லியே துதித்திருக்க வேண்டும். ஆனால் இவனோ நான் இப்படியல்ல என்று தன்னுடைய கிரியைகளைச் சொல்லி துதிக்கின்றான். ஆனால் ஆயக்காரன் வந்து, தூரத்திலே நின்று தன் மார்பிலே அடித்துக் கொண்டு 'தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்' என்றான். அவன் இதன் மூலம் என்ன சொல்கின்றான்: ஆண்டவரே என்னிடத்தில் நீதி ஒன்றுமில்லை, நல்லது ஒன்றுமில்லை, என்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் கறைபட்டு இருக்கின்றது. எனக்கு ஒரு மன்னிப்பு வேண்டும். பாவியாகிய என்மேல் கிருபையாயிரும், இந்த மன்னிப்பை தான் இயேசு ஏற்றுக் கொண்டார்.

## 03. நாவிலே சொல் வரவில்லை: ஆனால் முறையான ஒரு அறிக்கையை பேதுரு இருதயத்தில் செய்தார்.

**மத்தேயு 26:74-75** நீங்கள் மனிதர்களோடு தனிப்பட்ட பிரகாரமாய் அவர்களுக்கு விரோதமாய் ஏதாவது செய்திருந்தால் அவர்களிடம் எங்கள் வாயைத் திறந்து தனிப்பட்ட பிரகாரமாய் அவர்களுக்கு நீங்கள் செய்த காரியத்தைக் கூறி மன்னிப்பு கேளுங்கள். நாவிலே சொல்வரவில்லை. ஆனால் முறையான ஒரு அறிக்கையை பேதுரு செய்தார். இது தேவனுக்கும் எங்களுக்கும் இடையில் ஒரு தனிப்பட்ட காரியமாய் எடுத்துக் கொள்ளலாம். இயேசு பேதுருவைப் பார்த்து கூறினார்: இன்றைக்கு சேவல் கூவுகிறதற்கு முன்பதாய் நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய். அதற்கு பேதுரு: ஆண்டவரே நான் அப்படிச் செய்யமாட்டேன் என்று சொன்னான். பின்பு இயேசுவைப் பிடித்துக் கொண்டு சென்றார்கள். பிரதான ஆசாரியனுடைய அரன்மனைக்குள் அவரைக் கொண்டு சென்றார்கள். பேதுருவுக்கு இயேசுவின் மீதாக இருந்த அன்பின் நிமித்தம் என்ன நடக்கின்றது? என்பதனைப் பார்க்கப் போகின்றான். பேதுரு நெருப்பு மூட்டி குளிர்காய்ந்த இடத்தில் சென்று உட்கார்ந்தான். அப்பொழுது ஒரு பெண் வந்து நீயும் அவரோடிருந்தவர் போன்று இருக்கின்றதே என்று சொல்ல, பேதுரு அது நானல்ல என்று மறுதலிக்கின்றான். பின்பு இன்னொரு பெண் வந்து சொன்னாள்: உம்மைப் பார்க்க அவரோடு இருந்தவர் போல் இருக்கின்றதே. ஆனால் பேதுருவோ அது நானில்லை என்று சொன்னான். பின்பு பார்க்கின்றோம்: மற்றவர்கள் வந்து உன்னுடைய சாயலைப் பார்க்கத் தெரிகிறது, உன்னுடைய பேச்சைப் பார்க்கத் தெரிகிறது. நீ அவரோடிருந்தவ்தானே என்று சொன்ன போது: இல்லை அவரை எனக்குத் தெரியாது என்று சொல்லி சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான். அப்பொழுது சேவல் கூவிற்று.

**மத்தேயு 26:75 அப்பொழுது பேதுரு: சேவல் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இது தான் பேதுருவிடம் இருந்த ஒரு நல்ல இதயம். அவன் இயேசு சொன்னதை நினைத்து வெளியே போய் மனங்கசந்து அழுதான். ஆனால் வாயினால் எதுவும் சொல்லவில்லை. அவன் மனங்கசந்து அழுதான், அவன் உள்ளத்திலே உடைந்தான், கண்ணீர் வடித்தான். தான் செய்த பாவத்தை நினைத்து மனமுடைந்து அழுகின்றான். தேவன் அவனுடைய நொருங்கின இருயத்தைக் கண்டார்.

தேவனுக்கும் உங்களுக்கும் இடையில் இருக்கின்ற சில பிரச்சினைகளுக்காக உள்ளம் உடைந்தால் மட்டும் போதும். தேவன் அதைக் காணுவார். ஆனால் எங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையில் உண்டாகும் பிரச்சினைகளுக்காக நாங்கள் போய் வாயினாலே அறிக்கை செய்ய வேண்டும். மனிதர்களிடம் சொல்லும் போது உடைந்த உள்ளத்தின் சத்தம் நாவாலே வர வேண்டும். தேவனோடு நீங்கள் சொல்கின்ற போது உண்மையாய் உள்ளம் உடைந்திருந்தால் போதும். ஆனால் ஆதாமுக்கோ, யூதாஸ் காரியத்திற்கோ அறிக்கை செய்கின்ற ஒரு உள்ளத்தில் உடைவு வரவில்லை. தாவீதிற்கு அந்த அறிக்கை செய்கின்ற நிலை வாயினாலும் வந்தது. உள்ளத்தினாலும் வந்தது. பேதுரு உள்ளம் உடைந்த நிலையோடு இருதயத்தாலே செய்த அறிக்கையை கர்த்தர் கண்டு கொண்டார். தேவன் எதிர்பார்க்கின்ற நல்ல அறிக்கையை நாங்கள் ஒவ்வொருவரும் சரியாய் செய்ய வேண்டும். எங்களுக்கு நித்திய வாழ்வு வேண்டுமென்றால் எங்கள் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்ட ஒரு நிச்சயம் தனிப்பட ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். நாங்கள் பாவம் செய்தால் உணர்ந்து தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

முடிவாக வேதம் சொல்கிறது: மனிதன் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கிற போதே பாவத்தோடு பிறக்கிறான். பாவ அறிக்கை செய்து மன்னிப்பு பெற்ற தன் மேன்மை நியாயத்தீர்ப்பு நாளில் தெரிய வரும். பூமியிலே தேவன் உனக்கு தந்த சந்தர்ப்பத்தை வீணடிக் காமல் உன் பாவங்களை அறிக்கை செய், மன்னிப்பை இயேசுவிடம் இருந்து பெற்றுக் கொள். பாவம் செய்யும் கிறிஸ்தவனாக நீ வாழ்ந்து கொண்டு தூய்மையடைய வேண்டும் என்பதை மறந்து போனவராக இருந்தால் கிறிஸ்தவ போர்வைக்குள் இருக்கிறாய்.

உன் இருதயம் பாவ அறிக்கை செய்வதற்கு ஆயத்தமாக இல்லையென்றால் யார் வந்து கூறினாலும் அந்த அறிக்கை செய்யமாட்டீர்கள். ஆதாமுக்கும் – ஏவாளுக்கும் அருகில் தேவன் வந்து பேசிய போதும் அவர்கள் தங்கள் பாவத்தை மன்னிக்கும்படி கேட்கவில்லை. ஆனால் தேவன் அனுப்பிய மனிதன் நாத்தான் வந்த போது தாவீது தான் பாவம் செய்ததை ஏற்றுக்கொண் டான். பாவ அறிக்கை செய்வதற்குரிய இருதயம் இல்லாதவர்கள் சொல்லும் வார்த்தை எங்கள் பாவத்தை தேவன் பார்த்துக் கொள்ளுவார்.

தேவன் மனிதனுக்கு கொடுத்த சுயாதீனத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழையமாட்டார். எனவே நீயாக உணர்ந்து உன் பாவத்தை யார் உணர்த்தினாலும் உடனடியாக மனந்திரும்பி பாவ அறிக்கை செய்துகொள். எமது தவறுகளை தேவ ஆவியானவர் உணர்த்தலாம் அல்லது உனக்கு மேலாக உள்ள ஒருவரைக் கொண்டு உணர்த்தலாம். அல்லது உனக்கு கீழாக இருக்கும் ஒருவரைக் கொண்டும் உணர்த்தலாம், வேத வசனங்களைக் கொண்டும் உணர்த்தலாம். அல்லது தேவனே உன் முன் வந்து நின்றும் உணர்த்தலாம். உடனடியாக பாவ அறிக்கை செய்து கொள்ளுங்கள்.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




❒ போதகர் வேதநாயகம் மகாராஜா

# ரோமர் நிருபம்

## ஓர் சுருக்க விளக்கம்

### யூதர்களின் பாவம்

இப்போது மற்றவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்க்கும் சுயநீதியில் தங்கி வாழ்பவர்கள் சுயநீதிக்காரர்கள், இவர்களும் ஆக்கினைக்குட்படுத்தப்படுவார்கள். (ரோமர் 2:1-16)

இவர்கள் தங்கள் சொந்த நற்கிரியையில் தங்கியிருப்பவர்களாகவும், மற்றவர்களைக் குற்றப்படுத்துகிறவர்களாகவும் உள்ளனர். இவர்களின் மனப் பாங்கானது பெருமை, கொடூரம், அன்பின்மை போன்ற கொடிய பாவங்களால் நிறைந்திருப்பதைக் காட்டுகிறது.

ஆகவே மற்றவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்க்கும் சுயநீதிக்காரர்கள் குற்றவாளிகளாக்கப்படுவார்கள்.

புறஜாதிகள் செய்வதையே யூதர்களும் செய்கிறார்கள் என்பதைப் பவுல் தெளிவுறுத்துகிறார். எனவே புறஜாதியாருக்கும், யூதருக்கும் தீர்ப்பு ஒன்று தான்.

நியாயத்தீர்ப்பின் விதிமுறை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (ரோமர் 2:5-16)

யூதனானாலும் புறஜாதியானாலும் நியாயத்தீர்ப்பு:

1. சத்தியத்தின்படி கொடுக்கப்படும் - ரோமர் 2:2
2. நீதியுள்ள நியாயத்தீர்ப்பாக இருக்கும் - ரோமர் 2:5
3. கிரியைகளுக்குத் தக்கதாக இருக்கும் - ரோமர் 2:6
4. பட்சபாதம் இல்லாததாகவே இருக்கும் - ரோமர் 2:11
5. சுவிசேஷத்தின்படியானதாகவே இருக்கும் - ரோமர் 2:16

யூதரையும் கிரேக்கரையும் (புறஜாதியார்) ஒரே இடத்துக்குப் பவுல் கொண்டு வந்துள்ளார்

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# காலையில் ஜெபிப்போம்!

**வேதப்பகுதி: சங்கீதம் 5:1-8**

அருள்செல்வன் தினமும் காலையில் ஜெபம் செய்து வேதம் வாசிக்கும் பழக்கம் உடையவன். ஆனால் ஒரு நாள் அவனுக்கு பல அலுவல்கள் இருந்தது. எனவே அவைகளை முடித்த பின்பு ஜெபிக்கவும், வேதம் வாசிக்கவும் விரும்பினான். ஆனால் பல வேலைகள் இருந்ததால் அன்று அவனுக்கு ஜெபிக்க நேரம் கிடைக்காமலே போய்விட்டது. அருள்செல்வன் அதற்காக வருத்தப்பட்டான்.

அருள்செல்வன் என்ன செய்திருக்க வேண்டும்? எவ்வளவு அலுவல்கள் இருந்தாலும் முதலாவது தேவசமுகத்தில் ஜெபித்து வேதம் வாசித்திருக்க வேண்டும். முதலாவது வேலைகளை செய்ய ஆரம்பித்தால் பின்னர் நேரம் கிடைப்பது கடினமே. தாவீது பெரிய ராஜா. ஆயினும் அதிகாலையில் தேவனை நோக்கி ஜெபிக்க அவர் ஆயத்தமாயிருப்பார். காலையில் முதல் வேலை ஜெபிப்பதும் வேதம் வாசிப்பதும் தான் என்பதில் உறுதியாயிரு.

**சிந்தனைக்கு:-**

**காலையிலே கர்த்தருடைய கிருபையை தேடிக் கவனமாயிரு. நாள் முழுவதும் அவர் உன்னோடிருந்து நடத்துவார்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் - ஆகஸ்ட் 18

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 1000.00 |
| இந்தியா (India) | 2000.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 3000.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 2100.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 2100.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 2100.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேவன் தந்த வைரங்கள்...

தேவனை நம்பும்
மனம் தேவன்
விரும்பும்
பாதையிலேயே
செல்லும்

மனிதர்கள் எதிர்பார்க்கும்
வரவேற்பையும்,
உபசரிப்பையும்,
மரியாதையையும் கொடுக்கும்
சில மனிதர்கள்; தேவன்
எதிர்பார்க்கும் நீதியை அந்த
மனிதர்களுக்குக்
கொடுக்கமாட்டார்கள்

நம்மைக் குறித்து
மற்றவர்கள் பெரிதாய்
நினைப்பது அது புகழ்.
தேவன் எமது
இருதயத்தில் காண்பது
எதுவோ அது சுபாவம்.

பரிசுத்த தூதர்கள்
பணிவிடை ஆவிகள்
அல்லது வேலைக்காரர் என
அழைக்கப்படுகின்றனர்.
ஆனால் விழுந்துபோன
தூதர்களோ தங்களுக்கு
ஆராதனையையும்,
கனத்தையும் உரிமை
கோருகின்றனர்.

நல்ல கனி கொடுக்கும்
வாழ்வு வாழ எமது
ஆதாரம் தேவனிடம்
இருக்க வேண்டும்.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media